# விடுதலைப் பயணம்

## ( நாட்டுக்கூத்து )

வெளியீடு:-

திருமறைக் கலாமன்றம்



ஆக்கம்:
கலாபூஷணம்
அண்ணாவியார்
மு.அருள்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் பயணம்

## (நாட்டுக் கூத்து)

நூல் ஆசிரியர் :

"கலாபூஷணம்"

மு.அருள்பிரகாசம்

வெளியீடு :

திருமறைக்கலா மன்றம்

09.04.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்: விடுதலைப்பயணம்
முதற் பதிப்பு: 09.04.2012
சுவத்தாக்கம்: "கலாபூஷணம்"
மு.அருள்பிரகாசம்
வெளியீடு: திருமறைக்கலா மன்றம்
பதிப் புரிமை: நூல் ஆசிரியருக்கு
கணனி வடிவமைப்பு: இ.வியாசன்
அச்சமைப்பு: "துசி என்ரபிறைஸ்"
வஸ்தியன் சந்தி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
தொ.பே 0212228201
0774818305
விலை: 300 /=

இந்த நூல் தொடர்பான உங்கள் கருத்துக்களை வரவேற்கின்றோம்.
ஏதாவது வழுக்கள் தவறுகள் இருப்பின் சுட்டிக்காட்டவும்.
புத்தகப்பிரதிகள்
பெற்றுக்கொள்ள நீங்கள் எம்மிடம் தொடர்புகொள்ளலாம்
0770570206

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செந்தமிழ்த்தாயின்**

**சேவடிக்கு**

முச்சங்கம் வளர்த்ததோர் முத்தமிழே
முதுமொழியே
இச்சகந்தனிலிறவா செம்மொழியே -
மெச்சுபுகழ்
நாவினிக்க நெஞ்சினிக்க நவிலும்
செந்தமிழ்த் தாயுன்
சேவடி தனற்கிந்நூல் சமர்ப்பணமே



பாத்திரங்களேற்று நடித்துப் பலருடைய பாராட்டுதல்களையும் பெற்றுள்ளார். யாழ்ப்பாணகுடாநாட்டில் மட்டுமல்ல வன்னியிலும், மன்னாரிலும் இவர் தடம்பதித்துள்ளார் இடவேறுபாடு பாராது

அண்ணாவியார் மு.அருள்பிரகாசம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கெங்கெல்லாம் திறமையும் ஆற்றலும் உள்ளனவோ அங்கெல்லாம் சென்று தனது முழுமையான பங்களிப்புடன் அவற்றை வளர்தெடுதுள்ளார். எந்த இடத்திலும் எந்த மதத்தவருடனும் சுமூகமாகப் பணியாற்றக்கூடியவர். இதனால் பல்வேறு இடங்களிலும் பல்வேறு மதத்தவர் மத்தியிலும் இவருக்கு அபிமானிகள் பலர் உள்ளனர்.

இவர் நாட்டுக்கூத்துத் துறையில் சிறந்த படைப்பாளியாக, நெறியாள்கையில் கைதேர்ந்தவராக, நடிகராக, பாடலாசிரியராக சிறப்படைந்துள்ளமை இவரது படைப்புக்களுக்கு மேலும் மெருகூட்டுகின்றன. இவரது படைப்புக்களுள் தற்போதைய விடுதலைப்பயணம் எனும் நாட்டுக்கூத்து இவரது எல்லாப்படைப்புக்களுள்ளும் ஒரு மகுடம் போல அமைந்துள்ளது. இது நல்ல நெறியாள்கையுடனும், நடிப்புடனும் மேடையேறும் போது மேலும் சிறப்படையும் என எதிர்பார்க்கின்றேன். இறைவன் இவருக்கு வழங்கிய திறமைகளைத் தொடர்ந்து பேணி வளர்த்து இவருக்கு நீடிய ஆயுளையும் நற்சுகத்தையும் வழங்குவாராக. இவரது பணி தொடர மேலும் இறையாசீரை வேண்டி வாழ்த்துகின்றேன்.

அருட் கலாநிதி S.V.B. மங்களராஜா<br>
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி<br>
கொழும்புத்துறை<br>
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்பீட்டுரை

நாட்டார் பாடலையும், ஆடலையும் ஒருங்கே இணைத்து இவற்றை ஊடகமாகக் கொண்டு, எடுத்துக் கொண்ட கருத்தைப் பார்வையாளர்களின் உள்ளத்தில் ஆழமாகப் பதிவதற்கு கிராமத்தவர்களால் பேணப்பட்ட கலைவடிவமே நாட்டுக்கூத்தாகும். இங்கு தாளக்கட்டுப் பிசகாமல் பாடுவதும், பாடலின் தன்மைக்கேற்ப ஆடுவதும் பார்வையாளரின் கவனத்தை ஈர்த்து, பாராட்டைப் பெறுவதும் முக்கியமானவை தமிழ் மக்களின் பாரம்பரியக் கலைகளில் ஒன்றாகிய நாட்டுக்கூத்துக்கலை நாட்டுப்புற மக்களால் நன்கு விரும்பப்பட்டு, பேணப்பட்டு வந்துள்ள கலைவடிவமாகும்.

இலங்கையில் கத்தோலிக்க மதம் அறிமுகமாகிய காலத்தில் நாட்டுக்கூத்துக் கலை இங்கு நன்கு வளர்ச்சி பெற்றிருந்தபோதும், கத்தோலிக்க மறையைப் பரப்பிய போரத்துக்கேய மிஷனறிமார் நாட்டுக்கூத்துக் கலைவடிவத்தை கையாண்டு, கத்தோலிக்க மறையின் படிப்பினைகளையும், கோட்பாடுகளையும் பரப்பி இருப்பர் எனக்கொளவதற்கு ஆதார பூர்வமான தடயங்கள் எவையும் இதுவரையும் கிடைத்தில. எனினும், ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தின் முற்கூற்றில் கத்தோலிக்க மறைக்கு எதிராக நடைமுறையிலிருந்த இறுக்கமான கட்டுப்பாடுகளை 1750 களின் பின்பு அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாகப் படிப்படியாக தளர்த்த வேண்டிய நிலைப்பாட்டிற்கு ஒல்லாந்த ஆட்சியாளர்கள் தள்ளப்பட்டனர். இப்பின்னணியில் அதாவது, 16ஆம் நூற்றாண்டின் பிற்கூற்றிலேயே இலங்கையில் கத்தோலிக்க நாடகங்கள் தோன்றியிருக்கலாம் என மன்னார், மாதோட்டத் தமிழ் புலவர் சரித்திரத்தை ஆக்கிய பெஞ்சமின் செல்வம் அவர்கள் குறிப்பிடுகின்றார். (பக்கம் ii) இது மன்னார் மாதோட்ட பகுதியில் கத்தோலிக்க நாடகங்களின் தோற்றம் பற்றிய குறிப்புகளாகும்.

யாழ்குடாவில் 1810 இன் பின்பே கத்தோலிக்க நாடகங்கள் தோன்றியுள்ளதென தென்படுகின்றது. இவ் விடயம் தொடர்பாக இதுவரையும் எமக்கு கிடைத்துள்ள தகவல்களின் பின்னணியில் நோக்கும் போது 1810 இல் யாழ்ப்பாணம், பாஷையூரைச் சேர்ந்த சுவாம்பிள்ளைப் புலவர் எழுதிய "அந்தோனியார் நாடகமே" காலத்தால் முன்தோன்றியதாகக் கொள்ளப்படுகின்றது. என்னும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்தில் 1810 இற்கு முன்பும் கத்தோலிக்க நாடகங்கள் தோன்றியுள்ளன என்னும் கருத்து முன்வைக்கப்படலாம் என்னும் விடயத்தை முற்றாக புறந்தள்ளிவிட முடியாது. எது எவ்வாறு இருப்பினும் பாஷையூர் கிராமம் கத்தோலிக்க நாட்டுக்கூத்துக் கலையை வளர்ப்பதிலும், கத்தோலிக்க நாட்டார் இசை மரபுத்தோற்றத்திற்கும், பேணலிற்கும் கணிசமான பங்காற்றியுள்ளது.

இந்த வகையில் பாஷையூர் புலவர்களும், அண்ணாவிமாரும் 1810 முதல் பல கூத்துக்கள்ளை எழுதியும், மேடையேற்றியும் இக்கலையை வளர்த்துள்ளனர். எனவே நாட்டுக்கூத்தை வளர்ப்பதில் பெரும்பங்காற்றியவர்களின் பட்டியலில் பாஷையூர் மக்கள் முதன்மை பெறுகிறார்கள். இவற்றில் ஒன்றாக கலாபூஷணம் அண்ணாவியார் மு.அருள்பிரகாசம் அவர்கள் எழுதிய "விடுதலைப் பயணம்" என்னும் நாட்டுக்கூத்து வெளிவருகின்றது. ஏற்கனவே பல நாட்டுக்கூத்துக்களை எழுதியுள்ள ஆர்வலரான இந்நூலின் ஆசிரியர், வேதாகமம் கூறும் விடுதலைப் பயண வரலாற்றைக் கூத்தாக்கியுள்ளார்.

இஸ்ரவேல் நாட்டுப் பாரம்பரியத்தில் காணப்படும் "விடுதலைப் பயணம்" என்னும் வரலாற்று நிகழ்வை மரபு மாறா நாட்டுக்கூத்துக் கலையாக படைப்பதிலும், நீண்ட விவிலிய விடுதலைப் பயண கதைத் தொடரை பிசகின்றி நாடகப் பாடமாக அமைப்பதிலும் வெற்றி கண்டுள்ளனர் என்றே சொல்ல வேண்டும். இதற்கு அவரது முன்னைய கூத்து ஆக்கங்களின் அனுபவமும் காரணமாக இருக்கலாம்.

மேலும், இவரது கவித்திறனைத் துல்லியமாக எடுத்துரைக்கத்தக்கதாக பின்வரும் பாடலை குறிப்பிடலாம். இஸ்ரவேல் மக்களின் அனைத்து ஆண் குழந்தைகளும் நைல் நதியில் வீசப்பட வேண்டுமென்பது எகிப்திய மன்னன் பார்வோனின் கட்டளை இந்நூலின் ஆசிரியர் பார்வையாளரின் உள்ளத்தைத் தொடும் வகையில் இச்சம்பவத்தை கீழ்கண்டவாறு எடுத்துரைக்கின்றார்.

"ஈரைந்து மாதம் தாயவள் சுமந்தாள்
இடை நோக உடல் நோக பிள்ளையை பெற்றாள்
பேரது சூடி பெருமை கொள் முன்னே
வீரெனப் பாயும் நீரினில் எறிவோம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சேவகர் தரு - பக்.15)

மேலும் தம்மை மீட்டு, விடுதலையளித்து, மேகத் தூணாக வழிகாட்டி வழிநடத்திய இறைவன், செங்கடலைக் கடப்பதற்குத் துணை புரிய வேண்டுமென வேண்டுதல் செய்யும் பாடலாக இப் பாடல் அமைகின்றது.

"அண்டம் பிரபஞ்சம் அனைத்தையும் படைத்த
ஆண்டவா அடியோர் அவலங்கள் பாராய்
நீண்ட நாள் அடியாய் இருந்து நாம் மீண்டோம்
மூண்டதோர் பழியோ தூண்டினிற் புளுவோ
மாண்டிடத் தானோ ஒளிமேகத் தூணாய்
மாண்போடு எம்மை அழைத்து நீர் வந்தீர்
தாண்டி நாம் போக தடுத்திடும் கடல்தான்
வேண்டுதல் கேட்டே விலகிட அருள்வாய்"

(மோயீசன் அகவல் பக்.67)

இதன் ஆசிரியர் வேதாகமத்தை நெருங்கிய முறையில் தழுவியதாக தமது நாடகத்தை ஆக்கிய போதும் அரங்கியல் ஆற்றுகையை இலாபகரமாகக் கையாளச் சில இடங்களில் மாற்றங்களை அறிமுகம் செய்துள்ளார். இந்நூலின் பக்கம் 30 இல் இடம்பெறும் பார்வோன் விருத்தம், பார்வோன் வசனம் என்பவற்றில் வரும் விடயத்தை எடுத்துக்காட்டாகக் கூறலாம். இவ்வாறே பக்கம் 33 இல் இடம்பெறும் சிப்போராவின் வசனமும் அமைகின்றது. இக்கூத்து "விடுதலைப் பயணம்" என்னும் பொருளில் ஆக்கப்பட்டுள்ள போதும், இங்கு மோசே என்னும் பாத்திரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதனால், விடுதலைப் பயண முக்கிய நிகழ்வுகளுக்கு அளிக்கப்பட வேண்டிய இடத்தை அளிப்பதற்கு ஆசிரியருக்கு சிரமமேற்பட்டுள்ளது.

மற்றோர் நிலையிலிருந்து நோக்கும் போது இன்று ஆக்கப்படும் இவ்வாறான கலைப்படைப்புக்கள் கத்தோலிக்க மறையின் படிப்பினைகளை எடுத்தியம்புவதிலும் மேலாக, நாட்டுக்கூத்துக் கலையை அழிவினின்று பேணுகின்ற, வளர்க்கின்ற செயற்பாடாக நோக்குவதே பொருத்தமானது. எனினும் மத அறிவை வளர்ப்பதற்கு நாட்டுக்கூத்துகலை வழங்கிய, வழங்கிவருகின்ற சேவைகள் எந்தளவும் குறைவாக மதிப்பிட முடியாதவை.

கத்தோலிக்க நாடகங்களின் தோற்றக் காலத்தில், இந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகங்களில் ஆடல் மரபு செறிந்து காணப்பட்டது. எனினும் கத்தோலிக்க நாடகங்களினின்று ஆடல் மரபு நீக்கப்படுவதற்கு நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரே முன்னின்று செயற்பட்டவர் எனக் கூறப்படுகின்றது. கத்தோலிக்க நாடகங்களில் துன்பியலே மையப்பொருளாக்கப்பட்டு புனிதர்கள் வரலாறுகள் நாடக வடிவத்தில் எழுதப்பட்டன.

இவ்வாறான நாடகங்கள் ஆக்கப்பட்டதன் நோக்கம் கிறிஸ்தவ மக்கள் மத்தியில் நன்கு பிரபலமான புனிதர் வாழ்வை எடுத்துக்காட்டாக கூறுவதோடு, அப்புனிதர் மட்டில் பக்தியையும், மரியாதையையும் ஏற்படுத்துவதாகும். இதனால் நாடகத்தின் முக்கிய பாத்திரங்களான புனிதர்கள் ஆடுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இதனால் காலப்போக்கில் ஏனைய பாத்திரங்களுக்கும் ஏற்பட்டு கத்தோலிக்க நாடகங்களின் ஆடல் மரபு முற்றாக நிறுத்தப்பட்டது. மேலும் துன்பியல் நாடகங்களில் ஆடல் மரபு குறைக்கப்படும் போது எடுத்துக்கூறலாம். எனினும் கடந்த சில வருடங்களாக ஆடல் மரபு மீண்டும் கத்தோலிக்க நாடகங்களில் புகுத்தப்பட்டுள்ளது.

கலாபூஷணம் அண்ணாவியார் மு.அருள்பிரகாசம் அவர்களின் இரண்டு ஆக்கங்கள் தேசிய ரீதியில் விருது பெற்றமை இவரது கலைப்படைப்பு திறமைக்குச் சிறந்த சான்றாகும். இதில், "மாவீரன் சங்கிலியன்" என்னும் நூலிற்குச் சிறந்த நாட்டுக்கூத்துக்கான விருதினை மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கியுள்ளமையும், "மண்ணின் மைந்தர்கள்" என்னும் கலைப்படைக்கிற்கு, இலங்கை இலக்கியப் பேரவை சிறந்த நாட்டுக்கூத்துக்கான விருதினை வழங்கி கௌரவித்தமையும் குறிப்பில் இடம்பெறவேண்டியவை. ஒட்டு மொத்தமாக நோக்கும் போது நாட்டுக்கூத்து மரபுகளைப் பேணி சிறந்ததோர் படைப்பை இந்நூலின் ஆசிரியர் கலாபூஷணம அண்ணாவியார் மு.அருள்பிரகாசம் அவர்கள் ஆக்கியுள்ளார். இவரது கலைப்பணி மேலும் சிறக்க வாழ்த்தி, இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

வண,பேராசிரியர் ஞா.பிலேந்திரன்
கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத்துறைகள்
யாழ் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.
29.03.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் பயணம்
## முன்னுரை

தமிழர்களின் தனிப் பெருங்கலை என்று எடுத்தியம்பவல்ல கலை "கூத்துக் கலையாகும்". கிராமங்களோடு எஞ்சி நிற்க்கும் இக் கலை வடிவம் எமக்கான தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கலை என்பதும் குறிப்பிடத்தக்கது. இக்கலை இன்றைய நவீன தொடர்பு சாதனங்களினதும் வணிக முதன்மை நோக்குகளினாலும், "பூலோக மயமாக்கல்" போன்ற கலாசாரப் பொதுமைக் குவிவுகளினாலும் அழிந்தொழிந்து போகக் கூடிய அபாயம் நிலவும் சூழலில்அழிய விடாது பேணும் முயற்சிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறிய அளவிலாவது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாமும் நமது மன்றத்தின் ஊடாக பல்வேறு ஆக்க பூர்வமான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம். அதில் கூத்து நூல்களை அச்சிட்டு, அடுத்த சந்ததிக்கும் அதன் சுவடுகள் எஞ்ச வேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்பட்டு வருகின்றோம். இதுவரை பத்துக் கூத்து நூல்கள் எம்மால் வெளியிடப்பட்டுள்ளன. இந் நோக்கத்திற்கு உருச்சேர்க்கும் மற்றொரு நடவடிக்கையாக அண்ணாவியார் அருட்பிரகாசம் அவர்களின் ஆக்கத்தில் உருவாகிய 'விடுதலைப் பயணம்' என்னும் இக் கூத்து நூலினை வெளியீடு செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

அண்ணாவியார் கலாபூஷணம் மு.அருட்பிரகாசம் அவர்களை நான் நன்கு அறிவேன். கலைப்பூமியாகிய பாஷையூரில் பிறந்து வளர்ந்த இவர் தனது எட்டு வயதில் இருந்தே கூத்துத் துறையில் ஈடுபட்டு வருகின்றார். நடிகராக, அண்ணாவியாராக, கூத்து எழுத்தாளனாக மூன்று தளங்களிலும் இயங்கி வருகிறார். தனது சொத்துக்களையே விற்று கூத்தாடும் அளவிற்கு கூத்துக்கலையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது தீராத நாட்டம் கொண்டு இயங்கி வந்தவர். பல்வேறு சவால்களின் மத்தியிலும் தனது ஆர்வத்தினாலும், விடா முயற்சியினாலும் முன்னேறி வந்துள்ளவர். அடக்கம், பணிவு, மூத்தோரை மதிக்கும் இயல்பு, அன்புடன் எவருடனும் உரையாடும் இயல்பு என பல்வேறு நற்பண்புகளை தனது அணிகலன்களாக கொண்டு இயங்குபவர். இக் காரணங்களால் இவர் மீது எனக்கு தனி மரியாதை உண்டு. இவர் தொடர்ந்தும் தன் பணியில் நிலைக்க வேண்டுமென்று விரும்புகின்றேன்.

ஒரு காலத்தில் கூத்துக்கள் தமிழ்வல்ல புலவர்களினாலேயே எழுதப்பட்டன. அவை யாப்பிலக்கிணம் பிசகாது பாடப்பட்ட பாடல்களைக் கொண்டமைந்து காணப்பட்டன. ஆனால் அந்தப் பாடல்கள் பாமர மக்களை சென்றடைந்தவை என்பது கேள்விக்குறியே. எண்பதுகளுக்குப் பின்பு கூத்துக்களை எழுதிய பலர் மிக மிக எளிமையாக எல்லோருக்கும் விளங்கும் வகையில் பாடல்களின் மெட்டமைப்புக்கு ஏற்ப எழுதி மேடையேற்றினர். அவை சாதாரணர்களையும் சென்றடைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அந்த வகையில் அண்ணாவியார் அருட்பிரகாசம் அவர்களும் 17 கூத்துக்களை எழுதி மேடையேற்றியுள்ளார். அவர் தெரிந்தெடுத்த கதைக் கருக்களை நோக்கும் போது அவற்றில் அண்ணாவியாரின் கலை ஆர்வமும், தேசப் பற்றும், விடுதலை வேட்கையும் வெளிப்பட்டு நிற்பதனை அவதானிக்க முடியும். அவர் இதற்கு முன்பு வெளியீடு செய்த மண்ணின் மைந்தர்கள், ஸ்ரீவிக்கிரம ராஜ சிங்கனின் வரலாறு, மாவீரன் சங்கிலிய மன்னனின் வரலாறு. இப்போது வெளியீடு செய்யும் 'விடுதலைப் பயணம்' வேதாகமத்திலுள்ள மோய்சனின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட மாபெரும் விடுதலைப் போரின் வரலாறு ஆகும். எனவே இக் கதைத் தெரிவுகளினூடாக அண்ணாவியார் எமது வாழ்வியலின் ஒரு நோக்கினை பிரதிபலித்து நிற்கின்றார். அதற்கொரு பதச்சோறாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் பாடலை குறிப்பிடலாம்.

விடுதலை வென்றோம் வேகமே கொண்டோம்
வீறுடன் எழுந்து நாம் பேரணி கண்டோம்
அடிமைகள் குடிமைகள் அற்றிட விண்டோம்
ஆண்டவன் அருள் பல பெற்றிட நின்றோம்

என தனது ஆதங்கத்தினை வெளிப்படுத்தி நிற்கின்றார்.அத்துடன் வேதாகமத்திலுள்ள விடுதலைப்பயண வரலலாறு நீண்டது அதனை கூத்துக்குரிய கட்டமைப்புக்குள் ஆக்குவதென்பது மிகவும் சிரமமான பணியாகும். அண்ணாவியார் உரையிடையிட்ட பாடல்களின் முலம் அதனை நாடகமாக்கும் முயற்சியில் வெற்றி கண்டுள்ளார்.

எனவே அண்ணாவியார் மு.அருட்பிரகாசம் அவர்களின் இந்நூலாக்க முயற்சியைப் பாராட்டுவதுடன் அவர் தொடர்தும் தன்னை இத்துறையில் ஆழப்படுத்திக்கொண்டு மேலும்மேலும் ஊக்கத்துடன் செயற்படுவதற்கு இறைஆசி வேண்டி நிற்கின்றேன்
.

நீ.மரிய சேவியர் அடிகள்
இயக்குநர்
திருமறைக்கலா மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறன் நோக்கு

யாழ்ப்பாண மண்ணின் வரலாறானது தமிழர்களின் கலை, கலாசாரப் பண்பாடுகளுடன் மிகநெருங்கிய தொடர்புடையது என்பதை எவரும் மறுக்க முடியாது. இருந்தபோதும் கூத்துக்கலை பண்டையநாளில் பாமரமக்களின் பொழுது போக்குச் செயற்பாடாகவே விளங்கியது. இந்தக் கூத்துக் கலைவடிவத்தை யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போத்துக்கீசர் தமது கத்தோலிக்க மதத்தை யாழ்ப்பாண மண்ணில் பரம்வலடையச் செய்ய ஏற்ற வழிமுறை என்பதை நன்கு உணர்ந்து செயற்பட்டனர். அதன் காரணமாக கொழும்புத்துறை, பாசையூர், குருநகர், கொய்யாத்தோட்டம், சுண்டிக்குளி, நாவாந்துறை ஆகிய யாழ்ப்பாண தென்கரை கிராமங்களில் வாழ்ந்த மக்கள் அநேகம்பேர் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றினார்கள். இவர்கள் கூத்துக்கலையில் மிகவும் ஆற்றல் மிக்கவர்களாகவும், ஆர்வம் மிக்கவர்களாகவும் திகழ்ந்து வரலானார்கள். இவர்களுடைய கூத்துக்கலை வடிவங்கள் பெரும்பாலும் விவிலிய நூலில் கூறப்படும் சரிதங்களை முன்னிலைப் படுத்தியவையாகவே இருந்தது. இருந்தாலும் அவர்கள் தமிழர்தம் கலாசாரப் பண்பாடுகளைப் பேணிப்பாதுகாத்து கூத்துக் கலை வடிவங்களை செயற்படுத்திவந்தார்கள்.

இந்த வகையில் பாசையூரைச் சேர்ந்த கலாபூஷணம் முடிவப்பு அருட்பிரகாசம் அவர்கள் தென்மோடி நாட்டுக் கூத்தில் மிகவும் ஆழுமைமிக்க கலைஞராக விளங்கலானார். நடிகனாக, நட்டுவாங்கம் செய்யும் அண்ணாவியாக, சிறந்த புலமைமிக்க நாட்டுக் கூத்து எழுத்தாளராக பன்முகம் மிக்கவர் இவர் "மண்ணின்மைந்தன்" "மாவீரன் சங்கிலியன்" ஆகிய இரு நாட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்து நூல்களை வெளியிட்டிருக்கும் இக்கலைஞர் பல தேசிய விருதுகளைப் பெற்றுள்ளார். “மாவீரன் சங்கிலியன்” நூலுக்காக தமிழியல் விருதினைப் பெற்றிருக்கும் இவர் “மண்ணின் மைந்தன்” என்னும் நூலிற்கு இலங்கை இலக்கியப் பேரவையின் விருதினையும் பெற்றுள்ளார். தற்பொழுது வெளிவரும் “விடுதலைப் பயணம்” என்னும் நூல் விவிலிய “பத்துக்கற்பனைகள்” பற்றிய கதையை வெளிப்படுத்தும் நாட்டுக்கூத்துக் கலைவடிவமாகும். இந்நூல் வடிவமானது கலாபூசணம் முடியப்பு அருட்பிரகாசம் அவர்களின் புலமையின் ஆழத்தை நன்கு வெளிப்படுத்தியுள்ளது எனலாம். ஓசை நயம், உவமானம், உவமேயம், எதுகை மோனை என்பன இந்நூலில் மிகச் சிறப்பாக ஆசிரியரால் கையாளப்பட்டிருக்கிறது. விருத்தங்கள், வெண்பாக்கள் ஆசிரியப் பாக்கள் இந்நுஸலில் நிறைந்து காணப்பட்டாலும் வெண்பா வடிவங்கள் புதுவிதமாக அமைக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது. “இறைவன் எங்குமிருக்கிறான் வருந்தி அழைப்போருக்கு என்றும் உறுதுணை புரிவான்” என்ாதை இந் நாட்டுக்கூத்துப் பாடல்கள் மூலம் காட்சிப்படுத்திமிக அழகாக வடிவமைத்துள்ளார் கலாபூசணம் முடியப்பு அருட்பிரகாசம் அவர்கள். எமது கலை கலாசார விழுமியங்களை, நாட்டுக்கூத்தின் உண்மையான தோற்றத்தை இந்நூலின் மூலம் கூறும் புலவரின் நோக்கானது. மேலும் ஒருபடி உயர்ந்து நிற்பது தமிழ் நாடகக்கலையுலகம் பெற்ற பெறும் பேறாகவே கொள்ள முடியும்.

இல58, கனகரத்தினம் வீதி,
அரியாலை
யாழ்ப்பாணம்.
21-02-2012

கலைஞானச்சுடர்
அரியாலையூர் சி.சிவதாசன்
செயலாளர்
இலங்கை இலக்கியப்பேரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

பாஷையூர் மண்ணின் கூத்துக் கலைச் செம்மல் அண்ணாவியார் கலாபூஷணம் மு.அருள்பிரகாசம் அவர்கள் விடுதலைப்பயணம் என்னும் சரித்திரத்தை நாட்டுக்கூத்தாக எழுதி நூலாக்கம் செய்து வெளியிடுவது மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. மேடையிலே நடிப்பதற்கு ஏற்ற வகையில் உரிய குறிப்புக்கலுடன் நூல் அமைக்கப்பட்டுள்ளது. நாட்டுக்கூத்து மெட்டுகளுக்கு ஏற்றபடி பாடல்கள் புனையப்பட்டுள்ளன தமிழின் இனிமையிலே அருமையான தமிழிசைப் பாடல்களைப் பாடியுள்ளார்.

விண்ணோர் புகழ் தேவா மண்ணோர் தொழும் சீவா
எண்ணாய் நிகழ் ஈசா கண்ணாய் திகழ் நேசா
அன்றோ இஸ்ரவேலர் என்றும் வாழ்வர் நன்றாய்
என்றே வாக்களித்தீர் ஏனோ மறந்தீரோ
அன்னையும் நீரே தந்தையும் நீரே
ஆறுதல் தரும் ஆண்டவன் நீரே
அன்பு தாரும் என் துன்பம் தீரும்
உன் கருணையால் எனைக்காரும்

என்று மோயீசன் பாடும் பாடலை எடுத்துக்காட்டாக நோக்கலாம். நாடக உருவாக்கம் செய்பவன் எழுத்தாளனாகவும் கலைஞனாகவும் நாடகக்காரனாகவும் திகழ்கின்றான். கலாபூஷணம் அண்ணாவியார் மு.அருள்பிரகாசம் இத்தகைய திறனுடையவராக உள்ளார். நாட்டுப் பற்றும் தமிழ் பற்றும் மிக்கவரான அருட்பிரகாசம் தனது பாடல் திறத்தினால் அவர் ஆக்கியுள்ள இந் நாடகப் படைப்பு நிச்சயம் கலை உலகத்தினால் போற்றப்படும் என்று நம்புகின்றேன். மேலும் மேலும் பல கலைப்படைப்பாக்கங்களை இவர் உருவாக்க உளப்பூர்வமாக வாழ்த்தி நிற்கின்றேன்.

கலாபூஷணம்
அண்ணாவியார்
அ.பேக்மன் ஜெயராஜா
நாட்டுக்கூத்துப் பொறுப்பாளர்
திருமறைக் கலாமன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

அண்ணாவியார் மு.அருட்பிரகாசம் அவர்கள் 'விடுதலைப் பயணம்' என்னும் நாட்டுக் கூத்து நூலினை வெளியீடு செய்து வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். ஏற்கனவே அவர் எழுதிய மண்ணின் மைந்தர்கள், மாவீரன் சங்கிலியன் ஆகிய இரண்டு நூல்களையும் அவர் எமது மன்றத்தினூடாகவே வெளியீடு செய்தார். நாட்டுக் கூத்துத் துறையில் தீவிர பற்றுக் கொண்டு பணியாற்றும் அண்ணாவியார் அவர்கள் 17 கூத்துக்கள் வரையில் எழுதியுள்ளார். அவற்றில் அச்சுருவாகும் மூன்றாவது நூல் இதுவாகும்.

நாட்டுக் கூத்துக்கள் வாழ்வது 'அரங்கிலே' தான். எனினும் அவை காலங்கடந்து நிலைப்பதற்கும் வரலாற்றின் ஆதாரமாக திகழ்வதற்கும் அதன் நூலுருவாக்கம் அவசியமாகின்றது. இதை உணர்ந்து கொண்ட எமது மன்றம் தொண்ணூறுகளிலிருந்து இந் நூலாக்கப் பணியினை ஆரம்பித்தது. இதுவரை பத்து கூத்து நூல்கள் மன்றத்தினால் வெளியீடு செய்யப்பட்டுள்ளன. பதினோராவது நூலாக இவ் விடுதலைப் பயணம் அமைகின்றது. விவிலியத்தில் உள்ள விடுதலைப் பயண (யாத்திரை யாகமம்) நூலின் மையமாக அமையும் பாரவோனின் அடிமைத்தனத்தில் இருந்து இஸ்ராயேல் மக்களை மோயீசன் விடுதலை செய்த வரலாற்றினை அடிப்படையாக்க கொண்டு இக்கூத்து ஆக்கப்பட்டுள்ளது. இது வெறுமனே விவிலிய வரலாறு என்பதற்கு அப்பால் விடுதலைக்காக போராடும் எம்மினத்தின் வரலாற்றோடு ஒப்பு நோக்கவும், ஆற்றுப்படுத்தவும் வல்ல படைப்பாக அமைகின்றது. இது ஏற்கனவே சில தடவைகள் மேடையேற்றப்பட்டதன் பின்னரே அச்சுவாகனம் ஏறுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அண்ணாவியர் கலாபூஷணம் மு.அருட்பிரகாசம் அவர்களின் முயற்சியை பாராட்டுவதுடன் அவர் சமூக அர்ப்பணிப்போடு மிகுந்த பிரயத்தனங்களின் மத்தியில் மேற்கொள்ளும் இவ் வெளியீட்டுப் பணி காலங்கடந்தும் பேசப்படும் என்பது உறுதி. அவரது 'விடுதலைப் பயணம்' கூத்தானது யாழ்ப்பாண தென்மோடிக் கூத்து மரபிலும், கத்தோலிக்க நாட்டுக்கூத்துப் பாரம்பரியத்திலும் நின்று நிலைக்கும் ஒன்றாக இருக்கும் என்பதில் எமக்கு ஐயமில்லை.

யோ.யோண்சன் ராஜ்குமார்
பிரதி இயக்குனர்
திருமறைக்கலாமன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூலாசிரியர் உரை

ஈழத்தமிழ் மக்களின் கிராமியக் கலை வடிவங்களான உடுக்கு, தவில், நாதஸ்வரம், கரகம், காவடி, கும்மி, குடமுதல் கும்மி, கோலாட்டம், குதிரையாட்டம், குரங்காட்டம், புலியாட்டம் பொம்மலாட்டம், வேடராட்டம், ஒயிலாட்டம், சிலம்பாட்டம், வேப்பிலைநடனம், கடகருடனம், சுழகுநடனம், முகமூடிநடனம், அம்பாநடனம், வில்லிசை, இசைநாடகம், காத்தான் கூத்து, கோவலன் கூத்து, காமன்கூத்து, கதைவழிக்கூத்து, நாட்டுக்கூத்து என்பன எமது தொன்மை வாய்ந்த பாரம்பரிய கலைவடிவங்களாகும். இவற்றுள்ளும் எமது மண்வாசனை வீசும் கிராமியமணங்கமழும் தனித்துவமான கலை நாட்டுக்கூத்தாகும். யாழ்ப்பாண தென்மோடி கூத்துமரபில் முற்காலங்களில் நன்கு வடிவமைக்கப்பட்ட ஆட்டங்களுடனும் சுமார் இருநூறு வரையான மெட்டுகளுடனும் கூத்துக்கள் ஆடப்பட்டதாக அறிகிறோம். பின் வந்த காலங்களில் ஆட்டங்களில் பெரும் பாலானவை கைவிடப்பட்டு பாடுவதற்குக் கடுமையானவை எனக் கருதப்பட்ட சோகச் சுவைமிகுந்த மெட்டுக்களும் குறைக்கப்பட்டு கூத்துக்கள் ஆற்றுகைப்படுத்தப்பட்டன. தற்காலம் ஆட்டங்கள் மீள் கண்டுபிடிப்புச் செய்யப்பட்டு இணைக்கப்பட்டுள்ளதுடன் பாடுவதற்குச் சிரமமானது எனக் கைவிடப்பட்டிருந்த மெட்டுக்களும் கோர்க்கப்பட்டு கூத்துக்கள் அரங்காற்றுகைப்படுத்த முனைந்திருப்பது கூத்துக்கலை சரியான திசையில் வளர்ச்சிப்பாதையில் செல்கின்றது என்பதைக் கோடிகாட்டுகின்றது இந்தவகையில் திருமறைக் கலாமன்றத்தின் பங்களிப்பு விதந்துரைக்கப்பட வேண்டியது.

இதுவரை நான் எழுதிய பதினெட்டு நாட்டுக்கூத்து இசைநாடகங்களில் சம்மிக்கேல், விசுவாசத்தின் வெற்றி, குருதியில் மலர்ந்த அன்புமறை, இவரே உலகின் ஒளி, தியாக இராகங்கள், நா அழியா நாயகன், விடுதலைப்பயணம் ஆகிய ஏழும் கிறீஸ்த்துவ சமயக் கருத்துக்களை உள்ளடக்கிய கூத்துக்களே. இந்த

விடுதலைப்பயணம் கூத்து நூல் நான் வன்னியில் நாச்சிக்குடாவில் வசித்தபோது குமுழமுனை புனித அந்தோனியார் கோவில் பங்குத் தந்தையாகவிருந்த வண.அருட்திரு பீற்றர் அடிகளாரின் விருப்பிற்கமைவாக கிறீஸ்த்துவ மக்களின் புனித நூலான திருவிவிலியத்தின் யாத்திராகமத்தில் எகிப்தியரின் கொடூர அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலிய மக்களை மோயீசன் ஊடாக இறைவன் விடுவித்து அவர்களுக்கு வாழும் நெறிமுறை காட்ட பத்துக் கட்டளைகள் வழங்கிய விடுதலைப்பயணம் வரலாற்றை கூத்தாக்கம் செய்து அடிகளாரின் ஆதரவில் குமுழமுனைப் பங்கு புனித டொன் பஸ்க்கோ கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் ஆண், பெண் கலைஞர்கள் குழாம் பங்கு கொள்ள எனது நெறியாள்கையில் புனித அந்தோனியார் கோயில் முன்றலில் செங்கடல் பிரிந்து தரைவழி காட்டும் இறைவன் மாட்சி கடவுளிடம் பத்துக்கட்டளைகள் பெறுவதற்காக மோயீசன் சீனாய் மலை மீது ஏறும் காட்சி எனப்பிரமாண்ட வகையில் அரங்காற்றுகைப்படுத்தப்பட்டது. பாஷையூர் உதயதாரகை மன்றம் விளையாட்டுக் கழக அரங்கில் நடாத்திய புலவர் இன்சுவை கவிமணி பெ.கிறிஸ்த்தோப்பர் நினைவு விழாவில் பிரமாண்டமான மேடையில் அரங்கேற்றப்பட்டது.

எனது முதல் வெளியீடான மண்ணின் மைந்தர்கள் கூத்து நூலில் தமிழ் சிங்கள முஸ்லீம் இன ஐக்கியத்தை வலியுறுத்தும் கருத்தினை முன் வைத்தேன். இரண்டாவது வெளியீடான மாவீரன் சங்கிலியன் நூலில் எமது முன்னோர்களின் எழுச்சி மிகுந்த மகோன்னத வாழ்வையும் வீரத்தையும் காலம் பகைத்த போது கருங்காலிக் கூட்டத்தினரால் விளைந்த வீழ்வையும் காட்டி நின்றேன். இந்த விடுதலைப் பயணம் கூத்து நூலில் எகிப்தியரின் அடக்குமுறைக் கொடுமைகளினால் இஸ்ரவேல் மக்கள் படும் துயர வாதைகளிலிருந்து மோயீசன் வாயிலாக கடவுள் அவர்களை எவ்வாறு விடுவித்தார் என்பதையும் உலகில் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டங்கள் இறை ஆசி இருந்தால் வெற்றி பெற்றே தீரும் என்ற நம்பிக்கையை ஒளிரச் செய்யும் விதத்திலும் மனித வாழ்வு மேம்படுவதற்கு கட்டுக் கோப்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரிய நெறிமுறை மிகவும் அவசியம் எனும் கருத்தினைக் கொண்டதாகவும் படைத்திருக்கின்றேன்.

இந்நூலினை கூத்துக் கலைஞர்கள் நாட்டுக்கூத்து ஆர்வலர்கள் வரவேற்று ஊக்குவிப்பார்கள் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றேன்.

வாழ்த்துரை வழுங்கிய அருட்கலாநிதி எஸ்.வி.பி.மங்களராஜா அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

மதிப்பீட்டுரை வழங்கிய யாழ்பல்கலைக்கழக கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரீக துறைகள் தலைவர் அருட்கலாநிதி யா.பிலேந்திரன் அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

முன்னுரை வழங்கிய நன்னெறிச் சீலர் திருமறைக் கலாமன்ற இயக்குனர் அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அவர்களுக்கம் என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

திறன்நோக்கு ஆக்கித்தந்த இலங்கை இலக்கிய பேரவை செயலாளர் கவிஞர் சி.சிவாதாசன் அவர்களுக்கு என் இதயம் நிறைந்த நன்றிகள்.

அணிந்துரை அளித்த திருமறைக்கலாமன்ற அண்ணாவியர் கலாபூசனம் திருபேக்மன்ஜெயராசா அவர்களுக்கு என்மனம் நிறைந்த நன்றிகள்.

பதிப்புரை வழங்கிய திருமறைக்கலாமன்ற பிரதி.இயக்குனர் கவிஞர் திரு ஜொன்சன் ராஜ்குமார் அவர்களுக்கு என் மனம் மார்ந்த நன்றிகள்.

இந்நூல் அச்சேறுவதற்கு பேருவகையோடு துணைநின்ற துசி என்றபிறைஸ் அச்சகத்தார்க்கும் பொறுப்பாளர் பெருந்தகையாளர் திரு ரவிச்சந்திரன் அவர்களுக்கும் நூலின் கணனிசார் வேலைகளை மனநிறைவுடன் செய்துதந்த செல்வன் இ.வியாசன் அவர்கட்கும் என் இதயம் கனிந்த நன்றிகள்.

கலாபூசணம்
மு.அருள்பிரகாசம்
(நூலாசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் பயணம்

## (பத்துக் கற்பனைகள்)

# நாட்டுக் கூத்து

### காப்பு விருத்தம்

சீரோங்கு புவனம் மூன்றும்
திகழ்ந்திடு உயிர்கள் யாவும்
பாரோங்கப் படைத்ததேவன்
பதமலர் பணிந்து போற்றி
பேரோங்கு விடுதலைப் பயணங்காதை
பைந்தமிழ்க் கூத்தாய்ப் பாடுதற்கு
தேரோங்கு பதுவைமுனி புகழே சாற்றி
தேவமரி பாலன் பதம் காப்பதாமே

### தோடயம்

எங்கும் நிறை இறை ஏகபரன்
எல்லையில்லா நல் வல்ல வரன்
செங்கமலத் திரு பாத மலர்
சேயர் நாம் தொழுதோமே

பன்னிரு விண்மீன் சூடும் முடி
பருதி உடை புனை அன்னை மடி
பொன்னென மின்னிடு தேவபாலன்
பதமே துதி செய்தோமே

முடியுடை மூவேந்தர் போற்று தமிழ்
முச்சங்கப் புலவர் பா சாற்று தமிழ்
கொடி கொற்றங் கொண்டுல காண்ட தமிழ்
தாயே நின் பாதம் சரணே

திருவிவலியந் தனில் தேவன் தரும்
பரிசுத்த விடுதலைப் பயண மென்னும்
திருமறை நாட்டுக் கூத்தாய்ப்பாட
அருளே புரி யேசுநாதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் பயணம்

## (நாட்டுக் கூத்து)

## நாடக மாந்தர்கள்

மோயீசன்
ஆரோன்
வேடன்
அதிகாரி I
அதிகாரி II
கட்டியகாரன் I
கட்டியகாரன் II
வளரும் மோசே I
வளரும் மோசே II
பார்வோன் (மன்னன்)
மந்திரி
சேனாதிபதி
மந்திரவாதி I
மந்திரவாதி II
சேவகர் I
சேவகர் II
வளரும் மோசே III
வளரும் மோசே IV

**கடவுள்**

சிப்போரா (மோசே மனைவி)
மோசேதாய்
மோசே சகோதரி
இஸ்ரவேலிய மக்கள்
இளவரசி (பார்வோன் மகள்)
தோழி
குழந்தை மோசே
எகிப்திய மக்கள்
பார்வோன் படைவீரர்

**கதைக் கரு**

யாத்திராகமம்
விடுதலைப் பயணம்
பழைய ஏற்பாடு
திருவிவிலியம்

**இயற்றியவர்**

**கலாபூசணம் அண்ணாவியார்**

**மு.அருள்பிரகாசம் (பாசெய்யூர் யாழ்ப்பாணம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 1

| | |
|---|---|
| இடம் | :- எகிப்தில் பார்வோன் மன்னன் அரண்மனை |
| பாத்திரங்கள் | :- பார்வோன் அரசன், மந்திரி, தளபதி, கட்டியகாரர் |
| மெட்டு | :- பாட்டிலே ஓதிடிவேன் ......... வித்துக்கள் |

### கட்டிய காரர் வரவு

### கட்டிய காரன் I தரு

ஆதி நான்கு நாகரீகங்களே
அதில் புகழ் நைல் நதி நாகரீகம்
நீதி மன்னர் பவனி வாறார் முக
சோதியைப் பார்த்திடக் கூடிடுவீர்

### கட்டிய காரன் II தரு

ஓசரிசக் கடவுள் பெயர் சொல்லி
ஓங்காரமாய் அவர் பாடிடுவார்
தேசத்தின் ஈசன் எங்கள் மன்னன்
தேசுடனே வரவேற்போம் வாரீர்

### கட்டிய காரன் I தரு

மெனஸ் வேந்தன் குலமுதல்வன் அவன்
இனத்தின் வழி வந்தான் பார்வோன் மன்னன்
அணி முத்து மாலை ரெத்ன முடி
புணைந் தெதிர் வாறார் சிந்தாடிடுவீர்

### கட்டிய காரன் I தரு

தெருவெங்கும் தெங்கின்குருத்தொளிர்
தேசுடன் மாவிலை தோரணங்கள்
அரசர் வரும் பாதையெல்லாம் மிக்க
அழகுடன் செங்கம்பளம் விரிப்பீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டிய காரன் II தரு

கரகங் காவடிகளோடு பண்ணில்
காத்தான் கூத்தும் நல்ல நாட்டுக்கூத்தும்
அரசர் அகம் மகிழ்ந்திட அவையிலே
அரிவையரே ஆடிப்பாடிடுவீர்

## கட்டிய காரன் வசனம்

ராஜாதி ராஜ ராஜ மார்த்தாண்ட ராஜ கெம்பீர எகிப்து தேசம் ஆளும் இறைவன் பார்வோன் மன்னன் மந்திரி தளபதிகள் புடை சூழ பவனிவாறார். வெகு பராக் சமூகம் எச்சரிக்கை

மெட்டு :- சுப சுப சுப குண ....... (கண்டி அரசன்)

## மந்திரி வரவு

## தரு

மதி தங்கும் துதி எங்கும் ஓங்கவே - நயில்
நதி பொங்கும் நிதி இங்கு தேங்கவே - நாளும்
உதயத்தெழு ஒளியுற்றிடு கதிரோன் நிகர் எகிப்தின் பெயர்
அதி உத்தம பார்வோனின் மதி மந்திரிநானே

கட்டடக் கலை எங்கும் மிளிர்ந்திட - எகிப்தின்
பட்டணம் நகரங்கள் ஒளிர்ந்திட - என்றும்
கொட்டு முரசெட்டுமீ எழு நிலமும் எங்கள் நிலமாகிட
திட்டமிடும் தினமும் மதி பகர் மந்திரி நானே

விக்டோறியா ஊற்றெழும் நயில் நதி - எகிப்தின்
சக்தியாம் அதன் பயன் பெற்றிட - நாளும்
யுக்தியுடன் சித்திதனை பற்றி மன்னன் பாராட்டிட
தக்க மதி புகன்று வேந்தன் சொக்கச் சொல்வேனே

மெட்டு :- துணிவோடே வரு நமடயவரது.......
தேவசகாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேனாதிபதி வரவு

### தரு

விரைவே வரு அருணனின் கதிரென
வீரஉக்கிர்ம தீர விக்கிர்ம
உரங்கொண்டிடு எதிரிகள் தளங்களை
பொருதி எழுகடல் திரையின் நுரையென
கரைந்து விடும் நொடியில் அரண்கள் பொடியேபடும்
அரசன் பார்வோன் சேனைக்கதிபதி நானே

வீறே கொண்டெழு வெள்ளம் பொரு நதி
சீறிப்பாய்ந்திடில் யாரெதிர்ப்பரோ
கரையே கடந்திட வரு கடலென
இரைந்தெழுந்து என்படையோடமர் செய்யில்
வரையே ஒடுங்கும் இந்தத் தரையே நடுக்கும் நொடி
விரைந்தே அரசன் பார்வோன் அவைக்குச் செல்வேனே

அடலே மிகு திடத்துடன் எகிப்தினை
ஆளும் பார்வோனின் வாளை எதிர்த்தெவர்
படைகொண்டெதிர் வருகினும் அவர் புறம்
காட்டி ஓடிட நாட்டுவேன் ஜெயம்
மடைகள் பொருதும் கடல் மலைகள் எரியும் திடல்
தடைகள் தாண்டி மன்னன் விடைக்குச் செல்வேனே

மெட்டு :- அதி உக்ரம கோலன் ........ தேவசகாயம்

## பார்வோன் மன்னன் வரவு

### தரு

புவனம் எழுகடலும் - புலர்ந்திடும்
புவனம் அடங்கலும் என் - புரிதிறல்
போற்றும் புலமை என்றும் சாற்றும் எனது பெயர்
ஏற்றும் எழில்கொள் பார்வோன் வேந்தனும் நானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்கார வடிவம் - கொடிதுறும்
ஆங்கார நடனம் - புரிந்திடும்
ஆசாரியர் தொழும் ஈசன் எங்களின்
ஓசறியஸ் அடி போற்றிடுவேனே

ஆடும் அரம்பையர்கள் - சங்கீதங்கள்
பாடும் பாணரெல்லாம் - பரவிட
கொடிகள் குடை கொம்பு படைகள் புடைசூழ
குடிகள் மகிழ்ந்திடக் கொலுவிற் செல்வேனே

அகிலம் புகழ் மகிபன் - நைல் நதி பாயும்
எகிப்தை ஆள் நிருபன் - ஏற்றமுடன்
இடிகள் முளங்கிட கொடைகள் வழங்கிட
விடியுங்கதிரென முடி சூடிடுவேன்

அனு

ஏற்றமுடன் எகிப்து தேசம் ஆளுவேன்

## மந்திரி சந்த விருத்தம்

வான் ஒளிர் மின்னல்கள் கோன் எழில் மணிமுடி வசிகரமாவதனா
நானில மடங்கலுன் சேனைகள் வெற்றிகள் நாட்டிடும் மா மகிபா
தேன் பொழில் எகிப்து மா தேசம் தான் வணங்கிடும் தேசுலாவிடும் இறைவா
நின்னடி போற்றினேன் நின் புகழ் சாற்றினேன் நினைவதில் ஏற்றிடுவீர்

## சேனாதிபதி சந்த விருத்தம்

காராழி சூழ்கொண்ட பாரேழு கண்டங்கள் பணிந்திடும் பார்த்திபனே
ஏர் கொண்டு சீர்கண்ட எழில் எகிப்தாள்கின்ற ஏந்தலே போற்றி போற்றி
கூருண்ட வேல் கொண்டு குவலையம் ஓர்கொடி குடையின் கீழ் ஆள்மகிபா
தேர் கொண்டு பேர்பண்டு தேசங்கள் புகழ்ந்திடும் செம்மலே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றி

மெட்டு :- ஆதரை புகள் மந்திரி ..... மாவீரன் சங்கிலியன்
செப்பரும் சேனோபதியே ............ கண்டி அரசன்

### (நாட்டுவளப்பம்)

### பார்வோன் தரு

என்னரும் நேச மந்திரி - எங்கள்
இன்னுயிர்த் தேச தந்திரி
பொன் விளை பூமி தன்நிறை - காண
உன்னினேன் உண்மை சொல்வீரே

### மந்திரி தரு

நைல் நதி பாயப் பயம் ஏது - எங்கள்
உயிரதே இந்த உலகிற்கே
உணவழித்திடும் உழவர்கள் - கனவு
நனவாகி அதில் திளைக்கின்றார்

### பார்வோன் மறுதரு

கோட்டை கொத்தாளங்களோடு கூட கோபுரங்களெ
நீட்டமாய் எம் நாட்டின் பலம் நாட்டும் சேனாபதியே

### சேனாதிபதி தரு

வேற்படையும் வாட்படையும் தேர்புரவி படையும்
நாற் படை கொள்வீரர் என்றும் நாட்டுவார்கள் ஜெயமே

### பார்வோன் தரு

கலை கல்வி எங்கும் பொலியுதா - எங்கள்
கடவுளாம் ஓசரீசரை
உலகெலாம் வழி படுகுதா - இல்லை
ஒருவர் தானும் பிறழ்ந்தாரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மந்திரி தரு

கட்டடக்கலை வைத்தியம் - சிற்பம்
கணிதம் ஓவியம் சிறந்திட
இட்ட தெய்வம் ஓசறீசர் - வழி
பட்டிட கோயில் முட்டுதே

## பார்வோன் மறுதரு

பெருபடையோடமர் புரிய வருபகைவர் மிரள
வரைபெயரா நிலை தளரா உரமுறு படையுண்டோ

## சேனாதிபதி தரு

உருவில் பெரு படை வருனும் உறுதி குன்றா நின்றே
கருவில் தாயின் கருத்தை ஏற்றுத் திருநாட்டினை காப்போம்

## பார்வோன் விருத்தம்

இந்நகர் வளமை யாவும் இயம்பிடக் கேட்டு எந்தன்
சிந்தையில் இனிப்புக் கொண்டேன் செகம்புகழ் மதிவல்லோனே
எந்திசை பகைவரினும் எதிர்த்திடும் திறனே கண்டேன்
நிந்தனை வந்திடுமோர் விந்தை ஏதுண்டோ சொல்வீர்

## பார்வோன் வசனம்

மதியூக மந்திரியே மாபடைத்தளபதியே நமது நாட்டின் வளங்களையும் நாற்றிசையும் போற்றும் படை வலியும் உறுதிகுன்றா மனவலியும் கேட்டு மிக்க மகிழ்ச்சியானேன். நமது தேசத்தில் உலகோர் கண்டு வியக்கும் விந்தை விசித்திரங்கள் ஏதாவது உண்டா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மந்திரி வசனம்

மன்னா இது விந்தையும் அல்ல விசித்திரமும் அல்ல. சிந்தனையில்லாத எமது முந்தையோரால் வந்த நிந்தனை. யாக்கோப், யோசேப்பின் வழியாக இஸ்ராயேல் மக்கள் அனைவரையும் எமது எகிப்து நாட்டில் உள்வாங்கிக் குடியேற அனுமதித்ததன் விளைவு இன்று எமது எகிப்திய மக்களை விட இஸ்ரவேலிய மக்கள் எண்ணிக்கையில் பலுகிப்பெருகி வல்லமையில் மிகுந்து நமக்குப் பெரும் சவால் ஆகி விட்டார்கள்.

## தளபதி வசனம்

அது மட்டுமல்ல அரசே! நாம் அஞ்சத்தக்க இன்னோர் விடயம். எதிரிகள் எவராவது எம்நாட்டின் மீது படையெடுத்தால் நமது புவியியல் களநிலைகளையும் படைபல தள நிலைகளையும் நன்கு அறிந்திருக்கும் இந்த இஸ்ரவேலர் அதனை நமது பகைவர்களுக்கு காட்டிக்கொடுத்து விடக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. அதுமட்டுமன்றி எதிரிகளுடன் இணைந்து நம்மீதே அவர்கள் போர் தொடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## பார்வோன் சந்தக விருத்தம்

எத்தனை கெறுவம் எம் எகிப்தியரை விட ஏழை இஸ்ரேலியர்கள்
இத்தனை துரிதமாய் பலுகிப் பெருகிட பார்வோன் நான் பார்ப்பேனோ
நத்திப்பிழைத்திட நாட்டில் புகுந்தவர் வந்தேறு குடிகளன்றோ
புத்திரர் மெத்தவே புவி ஏழும் அவர் வம்சம்தளைத்திட
திளைத்திடுவார்
தக்கதோர் தருனத்தில் செப்பிநீர் செய்தியை செகத்தில்
இஸ்ரேலியர்கள்
சக்தியே பெற்றிடில் சர்வமும் அவர் வசம்சரிந்திடும் எமது ராட்சியம்
திக்கட்டும் திடுக்கிட இஸ்ரேலியர் திகைத்திட திட்டங்கள் தீட்டி
நாங்கள்
யுக்தியுடன் எபிரேயர் ஒடுங்கிட அடிமையாய் ஆக்கிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பார்வோன் சந்த தாழிசை

கடுமை கொண்ட வேலைகொண்டிஸ்ரேலியர் ஒடுங்கிட
நெடிய கட்டடங்கள் கொண்ட ராம்சேக பித்தோம் நகர்
கட்டும் அடிமை குடிமையாக்கி எபிரேயர் களைத்திட
குடும்பம் குடிகள் பெருகிடாது குட்டக்குட்ட குனிவரே
கொடுமை கொண்டு உலவும் கொலைஞர் எபிரேயர்
ஆண்குழந்தையை
அடலே பொங்க ஓடும் நயிலின் நதியின் நீரில் எறிந்திட
எடுபிடியாய் இஸ்ரவேலர் தாள் அடிமை செய்திட
அடிமை வேலை வாங்கும் அதிகாரிகள் அழைத்திட்டேன்.

## பார்வோன் வசனம்

கறையான் புற்றெடுக்க பாம்பு குடிகொண்டது போல குடிக்கக் கூழுக்கும் கட்டக் கந்தைக்கும் வழியற்று பஞ்சத்தால் அடிபட்டு பரதேசிகளாகி எமது எகிப்து நாட்டிற் புகுந்த இஸ்ரவேலர் இன்று ஏற்றங்கள் பெற்று எம்மை விஞ்ச ஆட்பலத்தில் மிகுந்து எமக்கு சவால் ஆகி நிற்பதை நாம் சகித்திடுவதா. அமைச்சரே, தளபதியாரே, இஸ்ரவேலர்கள் இனிப் பெருக விடக்கூடாது கடுமையான வேலைகளால் அவர்கள் களைப்புற்று குடும்ப உறவுகளில் ஈடுபடாது தடுக்க வேண்டும். பித்தோம் ராம்சேக களஞ்சிய நகரங்களை அமைக்கும் கடுமையான பணிகளிலும் வேளான்மை செய்யும் வயல் வேலைகளிலும் மிகுதியாக அவர்களை கொடுமைப்படுத்தி வேலை வாங்குவதற்கு அதிகாரிகளை நியமிக்கின்றேன். பிறக்கும் எபிரேய ஆண்குழந்தைகள் அனைத்தையும் நைல்நதியில் எறிந்து கொல்லும் படி மழுவர்களுக்கு ஆணை விடுக்கின்றேன். உம் நடக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு :- சங்கை பொங்கிய...... ஞானசௌந்தரி

## காட்சி - 2

## அதிகாரிகள் வரவு

### அதிகாரி I தரு

வீரதீரதி காரிதுரைகளே நாம் - விரைந்து வெற்றி
பார்வோன் பெற்றிட மார்பு தட்டிடுவோம் பார் கொண்ட கண்ட
ஊரெழுந்தரை யோடு மோதிட
நீரெழுந்திரை பொங்கி ஆடிட
ஏருளுந்தரை போல் சிவந்திட
எபிரேயர் எம் அடியில் வீழ்ந்திட

(வீரதீரதி)

### அதிகாரி II தரு

பார்வோன் ஆணையே பற்றி நாம் எழுவோம் படைகொண்டெதிர்
போர் பொருதினும் புறமே ஓட்டிடுவோம் எபிரேயரை
வேருடன் அழித்தே விழுத்திட
வீரர் விரைவுற வே வளைத்திட
கரங்கொள் பெரு சவுக்கால் பதைத்திட
இரத்தம் பெருகிட இஸ்ரேலர் திகைத்திட

(வீரதீரதி)

### அதிகாரி I தரு

அண்டமெண்டிசை அரசன் ஆணை கேட்டே அதிர்ந்து நிற்கும்
மண்டலங்கெடி கொண்டிட ஒடுங்கும் எதிர்ப்பவரின்
கண்டம் அரிந்துடல் துண்டு துண்டென
கண்டவர் உடல் பதறிச் சிதறிட
விண்டல மெழும் குருதி பெருகிட
வீழ்த்துவோம் இஸ்ரேலர் கதறிட

(வீரதீரதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அதிகாரி II தரு

எகிப்தினை எபிரேயர் விஞ்சிடவோ ஏற்றமே கொண்டு
எல்லை மீறிட தேசம் அஞ்சிடவோ எடுபிடிகள்
மகிமை பொங்கிட மக்கள் பெருகிட
மண்ணை அரசிட முடிகள் சிரசிட
நிகரெழுந்திடு முன் அழித்திட
நிகழ்த்துவோம் இஸ்ரேலர் கலங்கிட

(வீரதீரதி)

## காட்சி - 2

பாத்திரங்கள் :- சேவர்கள், மோசே தாய், அதிகாரிகள், இஸ்ரேலிய மக்கள்
இடம் :- எகிப்தின் பித்தோம், ராம்சேக, களஞ்சிய நகரங்கள்
மெட்டு :- எட்டியே நடந்துதோளா சட்டன வாடா ......... கனகசபை

### சேவகர்கள் வரவு

### சேவகர் I தரு

மறவர்கள் குலம்நாம் வீர அரசர்கள் பலம்நாம் - எம்மை
அறியாதார் நேரே கண்டால் அஞ்சி ஓடிடுவார்.

### சேவகர் II தரு

மரணமே எம்மைக் கண்டால் மருண்டு பின் ஓடும் - கொடிய
மழுவரே நாங்கள் வந்தால் மதகரி வாடும்

### சேவகர் I தரு

அரசரின் ஆணை தன்னைச் சிரமதிற் கொண்டே - மிக்க
விரைவுடன் சென்றே நதிக்கு இரையது விடுவோம்

### சேவகர் II தரு

கொலையது புரிவோம் எந்த நிலையிலும் கிறங்கோம் - எங்கள்
கலையது தானே எந்தத் தலையையும் கொய்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சேவகர் I தரு

இரக்கமே அறியோம் எந்த உருக்கமும் புரியோம் - கொடியோர்
சிரமதை அறுப்போம் நாங்கள் நர பலி இறுப்போம்

### சேவகர் II தரு

தூக்கினில் விடுவோம் துட்டரை கழுவினில் இடுவோம் - மெத்த
ஆக்கினை கொடுப்போம் கொடிய தாக்குதல் தொடுப்போம்

### சேவகர் I தரு

கைகால்கள் அறுப்போம் கரவர் கழுத்தினை முறிப்போம் - நாங்கள்
செய்தொழில் கொலையே இதிலே பொய்யொன்றுமிலையே

### சேவகர் II தரு

குடிகளென்றாலும் குழந்தை குட்டியென்றாலும் - பக்த
அடிகளென்றாலும் வெட்டும் கட்டளை தட்டோம்

### மோசே தாய் - இன்னிசை

விதியோ எவரின் சதியோ எங்கள் இனத்தின் கதிதான் இதுவோ ஈசா
மதியோ - கலங்கும் நிலையாகுதே மாகொடி தாய் எகிப்து நாட்டில்
புதிதாய் வந்த பார்வோன் எம்மைப் புரியா புதிராய் சட்டமிட்டே
மிதித்தே உயிரை வதைக்கின்றானே மீளாத் துன்பம் நீங்கிடாதோ.

மெட்டு :- மாகொடும் பாலியானேன் ...... முத்தா மாணிக்கமா

### தரு

ஆதியாய் வந்த தேவா - பிதா ஆபிரகாமின் தேவா
மூதாதையர் தேவா - மூத்த ஈ சாக்கின் தேவ தேவா

### தரு

மாகொடும் வாதைகளால் - இஸ்ரவேலியர் வாடுகின்றார்
சாகவும் விடவில்லை - நாங்கள் வாழவும் முடியவில்லை

### தரு

கண்கள் இருளுதையோ - கண்ணீர் தாரையாய் சொரியுதையோ
விண்ணின்று வாராயோ - நீரும் மீட்சியே தாராயோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தரு

அபயக்குரல் கேளாய் - எங்கள் அடிமைத் தனம் மீளாய்
இப்பெரும் துன்பம் போக்க - நீரும் தப்பாதே வாரும் தேவா

### மோசே தாய் வசனம்

இறைவா நீர் தேர்ந்தெடுத்துக் கொண்ட உமது இஸ்ராயேல் சனங்களுக்கு இக்கதி நேரலாமோ வேதனையோ சொல்ல முடியவில்லை வாதனையோ தாங்க முடியவில்லை எமக்கன்றோர் நாடில்லை எம்மைப் பாதுகாக்க ஓர் அரசில்லை அன்னிய தேசத்தில் அவல வாழ்வு வாழ்ந்து அல்லல் படுகின்றோம் எமது துன்பத்திற்கோர் முடிவில்லையா. எமது இன்னல்களுக்கோர் விடிவில்லையா. எமது அபயக்குரல் உமது திருக்காதுகளில் விழவில்லையா.

### அதிகாரி I விருத்தம்

நாடு விட்டு நாடு வந்தெகிப்து மண்ணில் ஒட்டுண்ணி போல் ஒட்டி
விட்டீர் எம்மை விஞ்ச
கோடி கோடியாகக் குடி கூடிவிட்டீர் இடம் தந்தால் மடம் எடுப்பீர்
இஸ்ரவேலீர்

### அதிகாரி II விருத்தம்

படம் எடுக்கும் விடப் பாம்பாவீர் எகிப்தின் மேல் நஞ்சதனை
நீர் விடுப்பீர் நிசமே உங்கள்
குட்டியோடு குழந்தைகளும் வெட்டி நதியின் நீரில்
போட்டிடுவோம் கொட்டமது அடங்கத்தானே

### அதிகாரி I வசனம்

நாடில்லா நாடோடியாய் நலிந்து அரைக்காசுக்கும் வழியில்லாது எமது நாட்டில் வந்து குடியேறி பன்றிகள் போல் குழந்தை குட்டிகள் பலுகிப் பெருகி அடக்கு வாரற்ற காளைகளாய் இது வரை உங்களை விட்டு வைத்தோம். இப்போது எங்கள் மன்னன் கட்டளைப் படி பித்தோம், ராம் சேக களஞ்சிய நகரங்களைக் கட்டும் கடுமையான வேலைகளிலும் வேளான்மை செய்யும் வயல்களிலும் உங்களை அடிமை குடிமைகளாக்கியிருக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரி II வசனம்

அத்தோடு விட்டுவிடுவோமென்று நிம்மதிப் படாதீர்கள் பிறக்கும் எபிரேய ஆண் குழந்தைகளையெல்லாம் நயில் நதியில் எறிந்து கொல்லும் படி பார்வோன் மன்னன் கட்டளை பெண் மகவுகளை வாழவிடுகின்றோம் உம் கொடுங்கள் குழந்தைகளை

## (இஸ்ராயேல் மக்களிடமிருந்து அதிகாரிகள் பிள்ளைகளைப் பறித்தெடுத்து மழுவர்களிடம் கொடுக்கின்றார்கள்)

## அதிகாரி I வசனம்

உம் கொண்டு போங்கள் நைல் நதியில் எறிந்து கொன்றுவிடுங்கள்

## ஆதிகாரி II வசனம்

அரசரின் ஆணை வீடு வீடாகத் தெடிச் சென்று ஒழித்து வைக்கப்பட்டிருக்கும் குழந்தைகளைக் கண்டு பிடியுங்கள் ஒருவரும் தப்பி விடக்கூடாது.

மெட்டு :- மன்னனைக் கார்க்க எண்யே நீயும் ........
மண்ணின் மைந்தர்கள்

## சேவகர் I தரு

மன்னவன் ஆணை தன்னையே உன்னி
மழலைகள் குழந்தைகள் மடக்கியே பிடிப்போம்
மின்னென நையிலின் நீரினில் எறிந்தே
மிடுக்குடன்வெடுக்குடன் கடமையை முடிப்போம்

## சேவகர் II தரு

ஈரைந்து மாதம் தாயவள் சுமந்தாள்
இடை நோக உடல் நோக பிள்ளையைப் பெற்றாள்
பேரது சூடி பெருமை கொள் முன்னே
வீரெனப் பாயும் நீரினில் எறிவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சேவகர் I தரு

விரிகடல் போலே பெருகும் இஸ்ற்ரேலர்
அருகிட மருகிட அடிமையாய் ஒடுங்கிட
விரைவுற ஓடும் வீறுகொள் நதியில்
வீசுவோம் வேந்தன் கட்டளைப் படியே

### சேவகர் I தரு

குழந்தைகள் எங்கும் ஒளிந்திடா இஸ்ரேலர்
குடியிருப் பெல்லாம் கடிதினில் தேடி
களவதுவாக வளர்ந்திடும் மழலை
கவர்ந்துமே களிப்போம் அழிவினில் மகிழ்வோம்.

### சேவகர் தரு

கொடுவாள்கள் கிறிசு கோடரி கொண்டு
குதித்துமே எழுந்து குழந்தையை மறைக்கும்
அடிமை இஸ்ரேலர் கெடியே கொண்டோட
அல்லல் படுத்தி அவர் குழந்தைகள் கொல்வோம்

## காட்சி - 2

பாத்திரங்கள் :- பார்வோன் மகள், தோழி,குழந்தை மோசே, மோசேதாய், மோசே சகோதரி

இடம் :- நைல் நதிக்கரையோரம் எகிப்தில் இஸ்ரேலிய குடியிருப்பு

மெட்டு :- முத்தமிழ் கலை வித்தகனாம் அந்த ........ மாவீரன் சங்கிலியன்

### பார்வோன் மகள் தரு

எகிப்தியர் தெய்வம் ஓசறியஸ் பெயர்
ஏற்றி நாம் போற்றிடுவோம் - இந்த
அகிலமே புகழ் பார்வோனின் புத்திரி
அவையின் கண் வணங்கிடுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தோழி தரு

றே எனும் கதிரோன் கடவுள் நாமம்
ஓதியே வாழ்த்திடுவோம் - ஒளி
ரூபமாய் தோன்றி மாரிவருஷிக்கம்
ருத்திரன் பதம் பணிவோம்

### பார்வோன் மகள் தரு

நீல வண்ணப் பட்டாடைகள் கட்டியே
நைல் நதி ஓடிடுதே - அதில்
நீந்தும் அன்னங்கள் சோடு சோடாய் ஒன்று
சேரவே கூடிடுதே

### தோழி தரு

நதிக்கரை ஓர நாணல்கள் தலை சாய்ந்து
நர்த்தனம் ஆடிடுதே - அங்கே
உதயத்தின் எழிற்காட்சியில் உள்ளந்தான்
உவகையில் பொங்கிடுதே

### இளவரசி தரு

அருவியில் வீசும் தென்றலில் அலை வந்து
கரையில் வெண் நுரையிடுதே - அதில்
முகிழ்விடும் குமிழ் எழில் காணப் புள்ளினம்
மகிழ் வோடு நிரையிடுதே

### தோழி தரு

வசந்தத்தின் இளம் பூந்தளிர் மேல் பொங்கும்
வாசத்தில் வீசும் சுகம் - அந்த
தேசுலாவிடும் தேன் மகரந்தத்தை
தேடிடும் வண்டு பாரீர்

மெட்டு :- வருவீர் ஓடி ....... ஞான சவுந்தரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோசே தாய் வசனத்தரு

காலைச் செங்கதிர்கவர்ச்சி முகமெடுக்க
மாலை மதியது மயக்கும் எழில் கொடுக்க
கோல விழி ஒளிர் கொஞ்சும் மொழி பொழில்
பாலகா உன்னைப் பாவி நான் பெற்றேன்

## தரு

கொடிதே கொடிதே அடிமை வாழ்வே - இந்த
கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டிலும் கானக
கொடும்புலி மேலன்றோ நெடு துயர் நீங்காதோ
விடிவே இன்றி மடிவேதானோ

## தரு

பால் வடியும் வதனம் பார்க்க - நெஞ்சம்
பதறுதே பெற்றெடுத்த வயிறதே எரியுதே
பாலகா உனைக் கொலை பாதகர் கை பற்றக்
காலமாச்சே கலங்கலாச்சே

## மோசே தாய் வசனம்

பார்வோன் மன்னன் பணிப்புரைக்குப் பயந்து கடந்த மூன்று திங்களாக அந்தக் கொலை பாதகர் கைகளில் சிக்காது என் மழலைச் செல்வத்தை மறைந்து வளர்த்து வருகிறேன் இதற்கு மேலும் ஒழித்து வைப்பது இயலாத காரியம் அழகு சௌந்தரியம் படைத்த என் குழந்தையை இனி எப்படிக் காக்கப் போகிறேன். சலப்பிரளயத்தால் நோவா சந்ததி சாகாமல் காத்த தேவா தகனப்பலியாகி நின்ற ஈசாக்கை இரட்சித்த இறைவா என் கண்மணியைக் காப்பாற்ற வழி காட்ட மாட்டாயா ஆண்டவா.

## மோசே சகோதரி வசனம்

கடவுளை நம்பினோர் கைவிடப்படார் நம்பிக்கையே மீட்சி தரும் அம்மா குழந்தையை கொலைஞரிடமிருந்து காப்பாற்ற எனக்கு ஒரு வழி தென்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோசே தாய் வசனம்

வழி இருக்கிறதா மகளே உனக்குத் தோன்றிய வழி என்னம்மா

மெட்டு :- சரணிமென்றூதிய .......... எஸ்தாக்கியார்

## மோசே சகோதரி தரு

பேழை ஒன்று செய்து நீர் புகா நிலக் கீல்தான் பூசியே - அதில்
குழந்தையை வளர்த்தியே நயில் நதிதன்னிலே விடுவோமே

## மோசே தாய் தரு

நயில் நதி நீரினில் அமிழ்த்தியே குழந்தைகள் கொல்கின்றார் - அந்தக்
கயவரின் கரங்களில் தயவுண்டோ அதனாலே பயனுண்டோ

## மோசே சகோதரி தரு

பார்வோன் மகள் அங்கு நீராட வருவாள் அந்நேரமே - அவள்
நேராகப் பேழையில் குழந்தையைக் காண்பாள் அவ்வேளையே

## மோசே தாய் தரு

அரசரின் குலமதில் கருணைகள் இருப்பதாய் அறியேனே - அந்த
இரக்கமில்லாள் நெஞ்சில் உருக்கங்கள் வருமென்றே உரைப்பதேன்.

## மோசே சகோதரி தரு

மழலையின் அழகினில் மயங்கிடுவாள் மன்னன் மகள்தானே-அவள்
குழந்தையைக் காப்பாற்றி வளர்த்திடுவாள் என் சொல்தப்பாதே

## மோசே தாய் தரு

குழந்தையைக் காத்திடக் கூறும் வழி கையில் கூடுமோ - அந்த
இளவரசி நெஞ்சில் இரக்கத்தை இறைவன் தான் வைப்பாரோ

## மோசே தாய் வசனம்

தெய்வ சித்தம் எதுவோ அதுவே நடந்தேறும் அவனன்றி
அணுவும் அசையாது உன் எண்ணப்படியே செய்வோம் மகளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோசே சகோதரி வசனம்

நம்பிக்கையோடிருங்களம்மா எல்லாம் நலமாகவே நடக்கும்

மெட்டு :- மரகதக் குளமதில் ...... மாவீரன் சங்கிலியன்

## இளவரசி தரு

இன்னிசைப் புள்ளினம் இரைந்திங்கே பறக்குதே இதயம் இனித்திடுதே
இன்னெழில் நைல் நதி பொன் பூத்துக் குலுங்குதே இனிமை
குலாவிடுதே

## தோழி தரு

விண்ணொளிர் மின்மினித்தாரகை நடுவிலோர் வெண்மதித் தேவியரே
தண்ணொளிர் வெண்கதிர் தங்கப் பந்தினைப் போலே விண்ணின்
கண் விளங்கிடுதே.

## இளவரசி தரு

பச்சைத்தாம்பளந்தனில் வெள்ளிநகையது போல்
பளிங்கு நீர் பாய்ந்திடுதே
அச்சமே அறிந்திடா மச்ச மீனினங்களே
அழகுடன் நீந்திடுதே.

## தோழி தரு

பொன்மான்கள் ஓடுதே பெண்மானத் தேடுதே
பூவில் வண்டுதேன் சுவைத்திடுதே
கன்னல் நிகர் அமுத மழலைக் குழல் ஒலிதான்
காதில் கீதம் பாடிடுதே

## இளவரசி தரு

அருணன் வரவில் மகிழ் மலரும் தாமரை போலே
உருகுதே உளம் ஏனோ தானோ
சீருடன் அருள் பிர காசமே தருதேன்
தீஞ்சுவைக் கவி இது தானோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தோழி தரு

மதி மயங்கிடும் மலர் தேன் மகரந்தம்
மன்னன் மகள் புன்னகை சொந்தம்
இதயமே நெகிழ்ந்திடும் மழலைச் சொல் அமுதம்
எழில் கொஞ்சும் முகம் ஒளிர் குமுதம்

### (நதியில் நாணற் புற்களுக்கிடையில் பேழையுள் குழந்தையைக் கண்டெடுக்கின்றனர்)

### இளவரசி கொச்சகம்

மாசில் மதியோ மலர்ந்த ரோஜா மலரின் இதழோ மழலை முகம்
வீசும் வசந்தம் தேசுலவும் பேசும் பொன்னோ நைல் நதிதான்
பாசத்துடனே ஈந்த இந்த பவளச் செவ்வாய் செங்கரும்பை
ஆசையுடனே வளர்த்தெடுக்க ஆர்தான் அமுதாய் பால்
தருவாரோ

### இளவரசி வசனம்

ஆகா கோடி சூரிய பிரகாசம் பொங்கித் ததும்பும் இந்தக் குழந்தை எபிரேயப் பெண் பெற்றெடுத்த பாலகனாய் இருக்க வேண்டும். அரச ஆணைக்குப் பயந்து பிள்ளையைக் காப்பாற்றப் பேழையிலிட்டு நதியின் பால் விட்டிருக்க வேண்டும். இந்தப் பிள்ளையை நாம் இறக்கவிடாமல் வளர்த் தெடுக்கப் பாலூட்டும் எபிரேய செவிலித் தாயொருத்தி வேண்டுமே.

### மோசே சகோதரி வசனம்

வணக்கம் இளவரசி இந்தக் குழந்தையைப் பாலூட்டி வளர்க்க எங்கள் இஸ்ரேலிய இன செவிலித் தாயோருத்தியை அழைத்து வரவா

### இளவரசி வசனம்

அப்படியே அழைத்து வா

### (மோசே சகோதரி குழந்தையின் தாயையே அழைத்து வருகிறார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோசே தாய் வசனம்

வந்தனம் இளவரசி

## இளவரசி வசனம்

எபிரேயப் பெண்ணே இந்தக் குழந்தையை நீ எடுத்துச் செல் எனக்குப் பதிலாகப் பாலூட்டி அதனை வளர்த்து வா நான் உனக்குக் கூலி கொடுப்பேன்.

## மோசே தாய் வசனம்

அப்படியே வளர்த்து வருகிறேன் இளவரசி

## காட்சி - 4

பாத்திரங்கள் :- மோசே தாய், வளரும் மோசே, பார்வோன் மகள், மோயீசன்
இடம் :- பார்வோன் அரண்மனை இஸ்ரேலிய குடியிருப்பு
மெட்டு :- பூமளமே என்னரிய ............ கண்டி அரசன்

## மோசே தாய் தரு

கோமழமே குலக் கொழுந்தே
கொஞ்சும் எழில் அஞ்சுகமே தேனே - உந்தன்
தேமதுர மொழியில் அந்த
தெய்வந்தானும் நெகிழ்ந்து விடும் மெய்யாய்

## வளரும் மோசே I தரு

அம்மாவே உன்தாள் பணிந்தேன்
அன்னையே உன் அமுதம் அருந்தி நானும் - என்றும்
செம்மலெனப் போற்ற வாழ்வேன்
சிந்தையில் உன் பதம் மறவேன் நாளும்

## பார்வோன் மகள் தரு

திங்கள் வளர் பிறையது போல்
தினமும் வளர்வாய் வாழ்த்தினேன் உன் தாயே - என்றும்
செங்கதிரோன் ஒளியெனவே
சீருடனே வாழ்ந்திடுவாய் மகனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளரும் மோசே II தரு

தன்னலம் இல்லாத தாயே
இன்புடனே எனை வளர்த்தீர் அம்மா - எந்த
துன்பமும் எனை நெருங்கா
தூயவளே எனை அணைத்தீர் தாயே

மெட்டு :- தேங்கு புனல் காட்டிடையே ....... மரியதாசன்

## மோசே தாய் மறு தரு

பண்பும் பணிவும் அன்பும் நிறைந்த பாலா - உந்தன்
எண்ணம் இஸ்ரேலியர் துன்பமே துடைத்தொரு
ஏற்றம் காண நாட்டம் கொள்வாய் சீலா

## வளரும் மோசே III தரு

கொடியோர் பிடியில் மடியும் இஸ்ரவேலர் - விழித்து
அடிமை வாழ்வினை விடுத்தெழுந்தொரு நிகரில்லா
விடுதலையின் தாகம் கொள்ள வேண்டும்

## பார்வோன் மகள் தரு

பாசமிகு நேச மைந்தா நீரும் - எங்கள்
ஓசறீச கடவுள் அடிபற்றில் எகிப்துமா
தேசமெங்கும் வீசுபுகழே சேரும்

## வளரும் மோசே IV தரு

அம்மாவே என் ஆதரவே நீரும் - அந்த
அமரரும் எனது முன் தெரிசனம் தருகினும்
உமதடியே போற்றி நிற்பேன் தாயே

## பார்வோன் மகள் வசனம்

மகனே நீரிலிருந்து உன்னை நான் எடுத்தேன். அதனால் உனக்கு மோசே எனப் பெயரிடுகின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோசே தாய் வசனம்

மகனே மோசே நீ மன்னன் மாளிகையில் மகிழ்வோடு வாழுகின்றாய். பால் பழம் அருந்தி பன்னீரில் குளித்து பஞ்சனையில் படுத்துறங்கு கின்றாய். ஆனால் உன் இனமக்களோ சொல்லொனாத் துன்பதுயரங் களுக்குள்ளாகி பரச் சுமைகளை சுமந்த வண்ணம் அல்லல் படுவதை நீ அறிய மாட்டாய். நீ உப்பரிகையிலே உலாவும் பொழுது உன் இனமக்களோ குடிசைகளிலே குமுறும் இதயத்தோடு குற்றுயிராய் துடிதுடிப்பதை நீ உணர்ந்திருக்கமாட்டாய். கொடுமை தாங்காது தினம் தினம் செத்து மடிந்து கொண்டிருக்கிறார்கள் மகனே இஸ்ரலேலிய மக்கள்.

## மோயீசன் வசனம்

அறிந்திருக்கின்றேன் அம்மா. நேரிலே பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லைதான். ஆயினும் நான் தெரிந்து தான் இருக்கிறேன். என் இன மக்கள் படும் இன்னல்களை உணர்ந்துதான் இருக்கிறேன் அம்மா நாம் ஏங்கி ஏங்கி அழுது கொண்டிருந்தால் மட்டும் நமக்கு விடுதலைகிடைத்து விடாது இறைவனின் ஆசியோடு வரும் இடுக்கன்களையெல்லாம் ஏற்று உறுதியோடு உணர்வு பூர்வமாக நாம் போராடினாளே விடுதலையை வெல்ல முடியும். எதற்கும் காலம் கனிய வேண்டும் அம்மா கடவுளின் கடாட்சமும் வேண்டும்.

## காட்சி - 5

பாத்திரம் :- மோயீசன், அதிகாரிகள், இஸ்ரேலிய மக்கள்

நிலைமை :- மோயீசன் தன்னின மக்களின் பாரச்சுமைகளையும் அவர்கள் கொடூரமான முறையில் அடிமைகளாக்கப்பட்டிருப்பதையும் காண்கிறார்.

மெட்டு :- சந்த மரி திரு ...... ஜெயசீலன்

## மோயீசன் தரு

கொடுமையே கொடுமையே
அடிமை வாழ்வு என்றும் கொடுமையே - அந்தோ
அடிகள் பட்டுடல் துடிக்க நாளங்கள்
வெடிக்க இரத்தங்கள் பெருக மடிகின்றார்
(கொடுமையே கொடுமை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரச் சுமைகள் தூக்கி
சோரும் இஸ்ரலியோ பாராயோ - இந்த
நேரம் உமதரும் உருக்கம் நிறைந்திடும்
இரக்கம் தாரும் மெய்த் தேவ தேவனே
(கொடுமையே கொடுமையே)

வல்ல தேவாதி தேவா
வையம் தனில் எம்மை நோக்குவாய் - நீரும்
எல்லை கடந்த உம் வல்லமை கொண்டெம்
தொல்லை விலகிட சொல்வாய் வழிதேவா
(கொடுமையே கொடுமையே)

**(மோசே கொடுமை செய்யும் அதிகாரியிடம்)**

## மோசே விருத்தம்

நிறுத்தடா துட்டா உந்தன் அரக்க வெறித்தனத்தை மெத்த
கெறுக் கொண்டெ எபிரேயர் மேல் கேடுபல செய்யறுற்றாய்
பொறுத்திடேன் உனை நான் இப்போ போர் செய்தே கொன்றிடுவேன்
பொறுக்கி நீ பொருது இன்றேல் புறங்காட்டி ஓடுவாயே

மெட்டு :- கிரிடத்தரசர் முடி ........ தேவசகாயம்

## அதிகாரி I தரு

எட்டுத்திக்குகள் எங்கும் எகிப்தின் அரசன் பார்வோன்
இட்ட கட்டளை தட்டி வெட்டி பேசுவாருண்டோ
அடிமை அடக்கும் அதிகாரித்துரை நான் எந்தன்
கொடி கோத்திரங் குலம் குடிமை நீ அறிவாயோ.

## மேயீசன் தரு

கொடிகுடை கொற்றங்கொண்டெழுந்த அரசும் ஒரு
நொடி தன்னில் முடிவுறும் அரசன் அடிமையாவான்
கொடும் இருள் பகலவன் உதயத்தால் அழிந்திடும்
விடியும் விரைவில் உங்கள் கொட்டங்கள் ஒழிந்திடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரி I தரு

இருந்த இடமறியா வருந்தி எமது மண்ணில்
துருந்தி உயிருடலம் வளர்த்து பெருத்து விட்டீர்
உரிமை வருத்திச் சொந்தத் தேசந்தானைச் செருவில்
பொருத வருவயலே பொடியாய் உடைப்பேன் உன்னை

## மோயீசன் தரு

பிறப்பில் பெருமை கொண்டு உரக்கப் பிதற்றும் உந்தன்
இறப்பில் மறுநாள் உடல் பெருத்தநாற்றமெடுக்கும்
நிறத்தில் கெறுவம் கொண்டு அறத்தை மறந்து நின்று
மறையை மதித்திடா உன் மமதை உடைப்பேன் நான்

மெட்டு :- வானத்தாரிடியொலி .............. எஸ்தாக்கியார்

## அதிகாரி I மறுதரு

அடிமைகள் இனத்தவன் நீ இன்று அரசரின் குலமதில் உலவிடும்
செட்டுமே பட்டுமே விட்டிட செருவினில் உருண்டிடும் உன்தலை
விரைவெறி வேலொடு வீசிடு வாளும் உன்
சிரமதை அறுத்துடன் சீவனை போக்கிடும்

## மோயீசன் தரு

வேங்கை நேர் வீரமே பொங்கிடும் வெற்புய முற்றிடு மெந்தன்முன்
சங்கொலி செய்திடு மூடனே சாகவோ வரமது வேண்டினாய்
இரக்கமே அறிந்திடா அரக்கனே உன்சிரம்
உரமுறுவாளினால் விரைவுற வீழ்த்துவேன்

**(மோயீசன் கொடுமை செய்த அதிகாரியை கொல்லுகிறான்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 6

பாத்திரங்கள் :- பார்வோன், அதிகாரி, பார்வோன் மகள் மந்திரி, தளபதி

இடம் :- பார்வோன் அரண்மனை

### அதிகாரி II ஆசிரியம்

சீர் மிகு எகிப்தின் செம்மலே போற்றி
செயம் திகழ் வேந்தனே போற்றி
நீர் மிகும் நைலின் நெடுகரை ஏற்றி
நிலவு நின் புகழது சாற்றி

அடையலர் நடுங்கப் படையோடு கொடிகொள்
அரசரின் ஆணையே தடுத்து
உடைத்திட ஒருவன் திடத்துடனெழுந்தான்
உம் திருமகள் வளர் மகனே

முரடனாம் மோசே இனமாம் இஸ்ரேலர்
முரண்பட்டார் அவர் அடிப்படுத்த
கரங்களில் விலங்கை கட்டியே வைத்தோம்
கடிதினில் கண்ணுற்றான் மோசே

சங்கொலி செய்தே சமரிட அவன்கை
ஓங்கவே அதிகாரி தன்னை
பங்கமே படுத்தி படைகள் நடு நடுங்க
சங்கரித்தான் இராசதுரையே

### பார்வோன் கனிநெடில்

பார் கொண்ட எழுகண்டம் பிரபஞ்ச மண்டலங்கள்
படபடென்றுடைந்திடினும்
பருதியது உருகி வெண் பனியதுவாய் ஆகினும்
படையெல்லாம் மூடமாகினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர் கொண்ட வேந்தனாம் பார்வோனின் சொல்தட்ட
பெருந்துணிவு கொண்டெழுந்து
பெட்டியுள் ஒடுங்கிய விடப்பாம்பு வெளிவந்து
படமெடுத்தாடியதோ

தார் கொண்ட எரிமலைத் தளம்புவாய் தணளதுவாய்
தகித்தெழும் தடந் தோள்கள்
தருக்கரை நொருக்கியே தலைவேறு கால் வேறாய்
தறித்திட அறைந்திடேனோ

ஈர் கொண்ட ஏழுலகும் எதிர்த்தொருகால் பொருதிடினும்
இடருறா இரும்பை யொத்த
இருதயம் படைத்த பார்வோன் இட்ட கட்டளை தன்னை
இஸ்ரேலியன் இகலலாச்சோ

## சிந்து

இட்ட கட்டளைகள் தட்டவோ - இஸ்ரேலியன்
கிட்டி எந்தன் ஆளை வெட்டவோ
நட்டணைகள் செய்துஅவன் துட்டத்தனம் ஒட்டவொட்டா
கொட்ட மடங்கிட செட்டும் ஒடுங்கிட வெட்டிடுவேன் அவன் திட்டமே
பட்டிட
(இட்ட கட்டளை)

ஆழி ஏழ் அலை நிகர்த்து ஆள்திறல் கோன் கொண்டெகிப்து
நீழ் புவியின் நிலமெல்லாம் தாள்பணிய வென்றடக்கும்
பார்வோனை மதியாது - மோயீசன் எந்தன்

பேர்தனை துதியாது - பேதமே கொண்டு
சூர அதிகாரி உடல் சோரவே வாள் பாச்சி இரத்தம்
பெருகிட உயிரது பருகிடத் துணிந்தவன்
உருளையில் அரைபட உடன் ஆனைவிடுவேனே
(இட்ட கட்டளை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு விட்டு நாடு வந்து நத்தி எம்மோடொத்திருந்து
கூடி நாடி ஓடி விளையாடி சேவகங்கள் செய்து
நாட்டினை மறந்து இந்த - நாட்டின் மைந்தருக்கு
கேட்டினைப் புரிந்த அந்த - மோயீசனை நான்
நாடு விட்டு ஓட்டி நெடுங்கானம் பாலைவனம் வழி
வாடிடச் சாடிட வதைபடப் புதைப்பட
காடிடை உயிர்படக் கட்டளை இட்டேனே

(இட்ட கட்டளை)

## பார்வோன் வசனம்

தீட்டிய மரத்திலே கூர்மை பார்க்கின்றான் மோயீசன் அடக்குவாரற்ற காளையாக அவனை வளர விட்டது பெருந் தவறாகிவிட்டது. கொலை செய்தவன் கொல்லப்பட்டே ஆக வேண்டும். பல்லுக்கு பல் கண்ணுக்கு கண் இரத்தத்திற்கு இரத்தம் பழிக்குப் பழி

(சிரிப்பு)

## (பார்வோன் மகள் வருதல்)

மெட்டு :- மாகருனாகர ............... தேவசகாயம்

## பார்வோன் மகள் தரு

பரிவுதான் இல்லையோ பாசந்தான் தொல்லையோ
பார்வேந்தே பாதகம் தான் எல்லையோ
நீர் விழிதாரையாய் சொரியுதே மைந்தனை
நீர் கொன்றால் எனது உயிரும் போம் மெய்யாய்

## பார்வோன் தரு

பெற்ற தாய்க்கில்லாத அக்கறை உந்தனிற்
குற்றவாறேது மெத்த மகளே
வற்றும் குளத்திடை வான்பவை நில்லா
பற்றும் அறுத்திடுவாய் மகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பார்வோன் மகள் தரு

தார் வேந்தே தந்தையே ஈரைந்து மாதம் தான்
பெற்றால் தான் தாயோ பேணி வளர்த்தேன்
கூருண்ட வேல் கொண்டு கொல்லாதீர் மைந்தனை
கும்பிட்டேன் பிழை பொறுப்பீர் அப்பாவே

## பார்வோன் தரு

கொலைஞனைக் கொல்லுதல் குற்றமாகா அவன்
குடியை அடியோடு நான் ஒடிப்பேன்
உலையில் கொதித்தெழு அனலிடுதே நெஞ்சம்
உக்கிர்மமாய் வஞ்சமே முடிப்பேன்

## பார்வோன் மகள் வசனம்

தந்தையே தயை கூர்ந்து என் மைந்தன் மோசேக்கு மரண தண்டனைதராது நாட்டைவிட்டு விரட்டி விடுங்கள். நாடு கடத்திவிடுங்கள் மீறி மைந்தன் உயிரை நீர் பறித்தால் உங்கள் மகள் எனது உயிரும் பிரிந்து விடும். இது உறுதியப்பா.

## பார்வோன் வசனம்

சரி, உன் எண்ணப்படியே ஆகட்டும் மகளே

## பார்வோன் விருத்தம்

அட்டமாதிசைகள் யாவும் அதிர் கொடும் திடமே கொண்ட
வெட்டுவாள் கரத்தில் பூண்ட வெஞ்சின சேவகரே நான்
இட்டகட்டளை தட்டி இடருறு கொலைசெய் மோசே.
நாட்டை விட்டோட்டிப்பாலை காட்டினில் விட்டிடீரே

## பார்வோன் வசனம்

வீர சூர மழுவர்களே கொஞ்சமும் அஞ்சாது எனது அதிகாரியை படுபாதகமாகக் கொண்ட அந்தக் கொடியவன் மோசேயை நாடு கடத்தி பாலை நிலந்தனில் தனியனாய் தத்தளித்துச் செத்திட விட்டு வருவீராக.

மெட்டு :- அத்தனருளாளி ...... தேவசகாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோயீசன் தரு

விண்ணோர் புகழ் தேவா மண்ணோர் தொழும் சீவா
எண்ணாய் நிகழ் ஈசா கண்ணாய்த் திகழ் நேசா
அன்றோ இஸ்ரவேலர் என்றும் வாழ்வர் நன்றாய்
என்றே வாக்களித்தீர் ஏனோ மறந்தீரோ
அன்னையும் நீரே தந்தையும் நீரே
ஆறுதல் தரும் ஆண்டவன் நீரே
அன்பு தாரும் என் துன்பந் தீரும்
உன் கருணையால் எனைக் காரும்

## தரு

சலம் பொங்கும் திரளில் சாகாது நோவா
சந்ததி காத்தாய் சர்வேஸ்பரா தேவா
பலியாக ஈந்தார் தந்தை ஆபிரகாம்
குலமைந்தன் ஈசாக் உயிர் காத்தாய் ஈசா
காலையில் கடும் சூரியன் அனல்
மாலையில் கொடும் குளிரின் வாதையில்
உலையில் கரும்பென உருகிக் கருகியே
அலையும் என்துயர் பாரும்

## மோயீசன் வசனம்

ஆண்டவா மனித சஞ்சார மற்ற மழையே காணாத கொடிய வரன்ட இந்தப் பாலைவனத்திலே பகலிலே கொடும் வெய்யிலிலே வெந்து இரவிலே கடுங் குளிரிலே நொந்து வழியேதும் தெரியாது விழி நீரைத் தவிர அருந்துவதற்கு ஒரு சொட்டு நீர்தானும் கிடையாது. யாருடைய துணையுமின்றி ஏகாந்தனாய் உன்னையே நினைத்துக் கதறும் உன் அடியனைக் காத்தருள்வாய் இறைவா

## சிப்போரா வரவு

மெட்டு :- அங்கேபராய் ................ விசையமனோகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தரு
நதிகள் பொங்கும் மிதியான் நாட்டின் நிதிசேர் பிரபுவாம் - அந்த
மதிதிகழ் நல் அர்ச்சகரின் மகள் நான் சபை வந்தேன்

### தரு
சுந்தரமாய் மந்தை மேய்க்கும் என் பேர் சிப்போரா - எந்தன்
தந்தை சொல் போல் இந்தரையில் மந்தை மேய்ப்பேனே

### தரு
முல்லை சூழ் இப் புல்வெளிகள் மருத நிலமாம் - அதில்
அல்லும் பகல் செல்லுவேன் நான் தொல்லை ஒன்றில்லா

## வேடன் வரவு

மெட்டு :- பண்டிதர்கள் சூழும் .......... கண்டி அரசன்

### தரு
காடு சூழும் நாடு வேடன் எந்தன் பாடு
காட்டில் ஓட்டம் ஓடும் மாக்கள் கூட்டம் எந்தன் தேடு

வில்லும் அம்பும் கொண்டு செல்லும் என் முன் நின்று
வெல்லும் வல்ல வீரன் இந்த தொல்லுலகில் உண்டோ

ஆடு புலி ஆட்டம் காட்டுவேன் நான் நீட்டம்
ஈடு உண்டோ இந்த வன வேடுவன் கொண்டாட்டம்

### சிப்போரா தரு
வெள்ளாடுதான் துள்ளித் துள்ளி தூரம் ஓடுதே - அதை
அள்ளியேதான் அணைப்பேன் அன்பாய் ஓரம் ஓடாதே

### தரு
செம்மறிகள் தம் பாட்டிலே தாவி ஓடுதே - அதை
செம்மையாக ஓட்டிச் சேர்ப்பேன் விட்டுப் போகாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரு

மந்தை எங்கள் சொந்தம் மதியம் தகிக்குதே வெய்யில் - தாக
சாந்திக்கு நான் தண்ணீர் காட்டி மாந்தச் செய்வேனே

## வேடன் தரு

வீர தீர சூர வெற்றி வன வேடன்
தாரணியில் யாரும் எதிர்கொள்வோர் இல்லாப் போரன்

சிங்கம் புலி கரடி சீறி எதிர் கொண்டால்
அங்கம் எங்கும் அம்புவிட்டுச் சங்கரிக்குஞ் சூரன்

பண்டு புகழ் கொண்ட கண்டோர் கெடி கொண்ட
தெண்டு கொண்டு மண்டலங்கள் வென்றடக்கும் வீரன்

## சிப்போரா வசனம்

தன்னந் தனியாக மந்தைகளை மேய்த்துக் கொண்டு இன்று அதிக தூரம் வந்துவிட்டேன். என்னைக்காணாது மிதியான் நாட்டின் அர்ச்சகரான என் தந்தை தவியாய்த் தவித்துக் கொண்டிருப்பார். மந்தைகளோ தாக விடாயினால் தத்தளிக்கின்றன. இங்கே தண்ணீர்த் தடாகத்தையோ நீர்ச்சுனைகளையோ நீரோடைகளையோ காண முடியவில்லை. நானும் மிகுதியாகக் களைத்துப்போய் விட்டேன். இனி திரும்பிச் செல்வது தான் உத்தமமானது.

**(வேடன் அர்ச்சகர் மகள் சிப்போராவைக் கண்டு மையல் கொள்கின்றான்)**

## வேடன் கொச்சகம்

வானின் அமுதோ வளர்மதியோ வதனம் கோடி கதிர் ஒளியே
தேனின் சுவையோ தேங்கனியோ தேவன் மகளோ மோகினியோ
கானின் வேடன் வலை வீழ் எழில் கொள் மீனோ மானோ
மருங் கொள் விழியோ
காணின் கண்கள் கோடா கோடி கனவின் மாயா ஜாலம் தானோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேடன் தரு

மெட்டு :- இந்தச்சிலம்புனது .......... முத்தாமணிக்கம்மாம்

தேடக் கிடைத்திடாத தேவாமிர்தமே - நானும்
தேடாது கிட்டி வந்தாய் வா சுகிர்தமே

## சிப்போரா தரு

கொடு வார்த்தை பேசும் கேடு கெட்ட வேடனே - உந்தன்
கூடாத எண்ணம் என்றும் கூடாதோடுவாய்

## வேடன் தரு

என் கையில் சிக்கி விட்டாய் சிட்டே நீ பெண்ணே - நீயும்
என்னை மணவாளனாகக் கொள்வாய் நீ கண்ணே

## சிப்போரா தரு

அலைபாயும் மனதைக் கொஞ்சம் அடக்கடா வேடா - உந்தன்
வலைதன்னில் சிக்க நானும் மானல்ல மூடா

## வேடன் தரு

வாராது வந்த அரும் மாணிக்க மின்னே - உன்னைச்
சேராது எந்தன் உயிர் தாங்காது கண்ணே

## சிப்போரா தரு

அனியாயம் புரிபவர்க்கு அந்தோ கேடன்றோ - என்னை
நினையாதே நீசனே நீ நீறாய்ப் போவாயே

## வேடன் தரு

வெட்டிப் நீ பேசிடாதே கட்டி கரும்பே - என்னைத்
தட்டிக் கழித்திடாதே தங்கமே மின்னே

## சிப்போரா தரு

அழிவே தான் வரும்பின் அறிவு கெட்டிடும் முன்னே - பொல்லா
பழிபாவம் பாரா மூடா விழுவாய் நரககே தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு :- அன்னையெல்லோ ....... ஜெனோவா

### வேடன் தரு

அன்னமே பசுங்கிளியே ஆரமுதே தேனமுதே
சொர்ணமே எனக்கினிய சொர்க்கமடி நீயே

### சிப்போரா தரு

மாதர் கற்பின் மகிமைக்கோர் மாமழைதான் பொழிந்திடும்
ஓதரும் நல் மானங்காக்க உயிரையும் நான் கொடுப்பேன்

### வேடன் தரு

வார்த்தெடுத்த பொற்சிலையே வான்மதியும் உன் நிழலோ
தேர்ச்சி பெறு சிற்பியவன் தேகமுந்தானோ

### சிப்போரா தரு

ஆழியுந்தான் பொறுத்திடும் மூன்று முறை அறிந்திடாய்
மூழும் பழி சூழுமுன்னே வீழுவாய் நீ அறிவாய்

### வேடன் வசனம்

ஆகா கோடி சந்திர ரூபலாவண்ணியம் பொருந்திய பொற்கொடியே உன்னைக் கண்டதே என் கண்கள் செய்த பாக்கியம் முடவனுக்குக் கொம்புத் தேன் கிடைத்தாற்போல இந்த வன வேடன் தேடக்கிடைத்திடாத திரவியம் நீ கையில் கிடைத்திட்ட கட்டிக்கரும்பை நான் சுவைக்காது விடுவேனா. கனிந்த பழம் வாயில் விழுந்த பின் பசித்தவன் பார்த்திருப்பேனோ.

### சிப்போரா வசனம்

அன்னப் பட்சி காக்கையிடம் அணுகுமா கலைமான் கரடியை விரும்புமா என் உயிரே மாய்த்துக் கொள்வேனே தவிர உன் எண்ணத்துக்கு ஒரு போதும் இசைந்து விடமாட்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேடன் சந்தத்தாழிசை

அந்தரர் மயங்கும் தேவ சுந்தரி உனதெழில்
நிந்தமும் என் சிந்தை வந்து சந்தகம் புரியுதே
விந்தையாய் எனை வெறுத்து வேடனென்றிகழினும்
சொந்தமாய் உனை அடைந்து தீருவேனிப் போதிலே

## மோயீசன் தரு

மெட்டு :- திறலேமிகுமறத்தமிழ்........மாவீரன் சங்கிலியன்

விடடா கையை வேடனே உன்குணம்
காட்டிப் பெண்ணிடம் சேட்டை விடுகிறாய்
எடடா உன் ஆயுத புய பலம்
உடைந்து நொருங்கிட உறுதி குலைந்திட
இடிகள் முளங்கும் நெடு படையும் கலங்கும் படி
அடிகள் விடுத்து உன்னை அடக்கிடுவேனே

## வேடன் தரு

கொடு கானக அரி கரி பரிகளும்
அடவி தனில் என தடி கண் டோடிடும்
விடங்கொள் கொடும் பாம்புடன் படைகளும்
வேடன் எனைக் கண்டால் மிரண்டு மருண்டிடும்
நெடிய விற்பொருதி விரையும் கணைகள் உந்தன்
உடலைப் பிளந்து உயிர் குடித்திடும் வாடா

## மோயீசன் மறுதரு

மெட்டு :- கிரிடத்தரசமூடி ........ தேவசகாயம்

நாட்டின் பண்பாடுதன்னைக் கேட்டும் அறியாவன
வேட்டுவப் பயலே உன் மோட்டுக் குணங்கள் மெத்தக்
காட்டு மிராண்டித் தனம் காட்டப் புறப்பட்டாயோ
கேடு வந்திடும் பின்னே கெடு மதி வரும் முன்னே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வேடன் தரு

போரில் வலிய வீர ராஜகுமாரர் எந்தன்
பேரில் பொருத வந்து புறமே காட்டிப் போனார்
நேரில் பொருதப் பெருஞ் சூரத்தனமாய் வாறாய்
ஊரில் உறவினர்க்கு உரைத்தோ விரைந்து வந்தாய்

### மோயீசன் சந்த விருத்தம்

விரிகடல் எதிர்படு சிறுதுரும் பொருபடும்
விடியலில் இருள் என்னாகும்
பருதி முன் பனித்துளி வேங்கை முன் சிறுநரி
பகைத்திடில் பதைத்திடுமே
எரிமலை அனலென எழுதிறல் என்புய
வலிமையை அறிந்திடாய் நீ
விரைவுறு புயலென பொருதியே உனதுடல்
பொடிப் பொடியாக்கிடுவேன்

### (வேடன் தோற்றோடுகின்றான்)

### சிப்போரா தரு

மெட்டு :- தேங்குபுணல் காட்டிடையே ...... மரியதாசன்
கொடிய இருளின் நடுவில் ஒளிபோல் வந்தீர் - காட்டு
வேடன் விரிவலையில் வீழ்ந்திடா எனைக் காத்தீர்
இடர் களைந்த வீரா நீர் தான் யாரோ

### மோயீசன் தரு

எகிப்தில் வாழ்ந்த எபிரேயன் தான் மோசே - கொடுமை
சகித்திடா எதிர்த்திட அரசன் கட்டளைப்படி
தகிக்கும் பாலை வனத்தின் வழியே வந்தேன்

### சிப்போரா தரு

கர்ப்பைக் காத்த உத்தமா என் உயிரே - நீரும்
விரும்பிடில் எமதுடன் வீட்டினில் நிதமுமே
இருந்திடலாம் இனிதாய் வாழ்வோம் நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோயீசன் தரு

மண்ணில் வந்த வெண்ணிலவே கண்ணே - உந்தன்
எண்ணம் இனிதே இனி இணைந்தொன்றாய் வாழுவோம்
அன்றில் போலே ஒன்றாய்ச் சேர்வோம் நாமே

## சிப்போரா தரு

வானும் நிலவும் தேனும் சுவையும் பிரியா - காதல்
கானங்கள் பாடியே கலந்தொன்று கூடுவோம்
கனவில் தானும் இணை பிரியோம் அன்பே

## மோயீசன் தரு

மின்னல் தன்னில் நிறமெடுத்த மானே - வானில்
மின்னும் கோடானு கோடி விண்மீன்கள் கண் ஜாடை
தன்னில் நம்மை வாழ்த்திப் போற்றும் தேனே

## காட்சி - 8

பாத்திரங்கள் மோயீசன் கடவுள் (அசரீரீ)
இடம் மிதியான் நாட்டின் பாலை வனம்

## மோயீசன் தரு

மெட்டு :- சரணம்மென்றோதிய ......... எஸ்தாக்கிழபர்

சீருடன் மந்தையை வேறிடம் மேய்த்து நான் செல்வேனே - இங்கு
ஓரிடம் நின்றிடில் உணவின்றி மந்தைகள் மடியுமே

மிதியான் நாட்டின் மேற்குத் திசையாக ஒட்டி நான் செல்வேனே - அங்கு
அதிகமாய் புல்லுண்டு அதை உண்டு மந்தைகள் பிழைக்குமே

என் இனமக்களோ எகிப்தினில் படுந்துன்பம் கொஞ்சமோ - அந்த
அன்னிய மண்தனில் அடிமையாய் அல்லாடல் வஞ்சமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோயீசன் வசனம்

ஆண்டவா இஸ்ராயேல் மக்கள் மீட்சி பெறும் காலம் எப்போது அவர்கள் அடிமைத் தளையிலிருந்து விடுபடுதல் எப்போது அவர்களின் பாரச்சுமைகளுக்கு ஆறுதல் கிடைப்பது எப்போது. இறைவா உனையன்றி விமோசனம் தருபவர் யார் நீயின்றி நிகழ்வேது ஏது நின் நினைவின்றி நிழலும் அசையாது.

## மோயீசன் தரு

இஸ்ராயேல் மக்களை இறைவனே காத்திட வேண்டுமே கொடும் நீசரின் நாசத்தை நிறுத்தியே மீட்டிட வேண்டுமே

## மோயீசன் வசனம்

அதோ எரிந்து கொண்டிருக்கிற முட்புதர் கருகிவிடாதிருக்கின்றதே இந்த மாபெரும் காட்சியைப் பார்ப்பதற்காக நான் அங்கு செல்வேனாக.

## கடவுள் வசனம்

மோயீசா உன்பாதங்களிலிருந்து மிதியடிகளைக் கழற்றிவிடு ஏனெனில் நீ நின்று கொண்டிருக்கிற இந்த இடம் புனிதமான நிலம்.

## மோயீசன் வசனம்

யார் என்னை அழைத்தது உங்கள் திரு உருவிலிருந்து வரும் ஒளி வெள்ளத்தின் முன்னால் என் கண்கள் கூசுகின்றனவே

## கடவுள் வசனம்

உங்கள் மூதாதையரின் கடவுள். ஈசாக்கின் கடவுள் யாக்கோப்பின் கடவுள் நானே. மோயீசா இஸ்ராயேல் மக்களின் அழுகுரல் என்னை எட்டியுள்ளது எகிப்தில் என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன். எனவே எகிப்தியரின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்கவும் அந்நாட்டிலிருந்து பாலுந்தேனும் பொழியும் நல்ல பரந்ததோர் நாட்டிற்கு அவர்களை நடத்திச் செல்லவும் இறங்கி வந்துள்ளேன். மோயீசா நீ இப்போதே போ இஸ்ரவேல் இனத்தவராகிய என் மக்களை எகிப்திலிருந்து நடத்திச் செல்வதற்காக நான் உன்னைப் பார்வோனிடம் அனுப்புகிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோயீசன் வசனம்

பார்வோனிடம் செல்வதற்கும் இஸ்ராயேல் மக்களை அழைத்துப் போவதற்கும் நான் யார் நானோ பேச்சுவன்மையற்றவன்

## கடவுள் வசனம்

மனிதனுக்கு வாய் அமைத்தவன் யார். அவனை ஊமையாக அல்லது செவிடாக பார்வையுள்ளவனாக குருடனாக வைப்பவன் யார் ஆண்டவராகிய நான் தானே ஆகவே நீ இப்போதே போ நானே உன் நாவில் இருப்பேன். நீ பேச வேண்டியதை உனக்குக் கற்பிப்பேன் நாவன்மையுடைய உன் சகோதரன் ஆரோன் உன்னைச் சந்திப்பதற்காக வந்து கொண்டிருக்கிறான். நீங்கள் செய்ய வேண்டியதை நான் உங்களுக்கு அறிவுறுத்துவேன் என் கைவன்மையைக் கண்டாலன்றி எகிப்திய மன்னன் உங்களைப் போக விடமாட்டான். எனவே என் கையை ஓங்குவேன் நான் செய்யப் போகும் அனைத்து அருஞ் செயல்களாலும் எகிப்தினைத் தண்டிப்பேன் அதன் பின் அவன் உங்களை அனுப்பிவிடுவான்.

மெட்டு :- பூசித உசிதராச ............. எஸ்தாக்கியார்

## மோயீசன் தரு

ஆதி அந்தம் இல்லா இறைவா
ஆபிரகாம் ஈசாக் யாக்கோப்
ஆண்டவா உந்தன் அருளே தா

பிதாப் பிதாக்கள் தேவா போற்றி
மூதாதையர் தேவா போற்றி
நீதிகொள் தேவா போற்றினேன்

எரியும் முள்ளும் செடியும் கருகா
அருள் மறையே திரு உருவே
பரிசுத்தா நின் தாள் பணிந்தேனே

புனித நிலத்தில் எரியும் புதரில்
கனிவாய் திருவாய் மலர்ந்த ஈசா
மனமெல்லாம் இறைவா நிறைவாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 9

## ஆரோன் வரவு

### தரு

மெட்டு :- பொன்னொளிர் பூரண ............ தேவசகாயம்

வெள்ளி பனி மலையும்
துள்ளும் கடல் அலையும்
அள்ளுமே – நெஞ்சை
கொள்ளை கொள்ளும் மதி
வள்ளல் உந்தன் புகழ் விள்ளுமே

புலரும் கதிரின் ஒளி
மலரும் பூவின் எழில்
இலங்குமே – அந்த
அலையில் ஒளிரும் முத்து
நிலம் கீழ் மின்னும் மணி இறை நீயே

நீயின்றி நினைவேது
நிழல்தானும் அசைவேது
நிசமேது – யாவும்
தூயோன் நின் செயலதே
சேயோன் நின் பதமலர் தொழுதேனே

## காட்சி - 9

பாத்திரங்கள் :- மோயீசன் ஆரோன்
இடம்
மெட்டு :- காரணம் கண்டேன் ஒரு ............. கற்பக மாலா

### மோயீசன் தரு

ஆண்டவர் அழைப்பில் பேறு பெற்றேனே - அவர்
ஆணையால் தேறுதல் நான் உற்றேனே
தூண்டிடும் தூயோன் பாதம் தொழுவேனே - அவர்
துணையினால் அவலம் நீங்கி எழுவேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரோன் தரு

பரம் பொருள் உரையின் பணி செய்வேனே - அவர்
பாதையில் பயணம் என்றும் செல்வேனே
அருள் நிறை குருவே எம்மை ஆளவா - இஸ்ரேல்
குரு குலம் மக்களை நீர் மீளவா

## மோயீசன-தரு

சோதியாய்த் தோன்றும் ஈசன் தேற்றுவார் - எந்தன்
சோதரன் ஆரோன் காண ஆற்றுவார்
நீதியாம் அவர் கை எகிப்தின் கொடுங்கோலின் - மேலாய்
நீழுமே இஸ்ரேல் அன்றே மீளுமே

## ஆரோன் தரு

எத்தனை காலமாச்சே எந்தனின் - தம்பி
உத்தமன் மோசேயை நான் காணவே
உத்தாரம் தந்தார் தேவ கத்தனே - நானும்
இத்தினம் காணத் தெய்வச் சித்தமே

## (மோயீசனும் ஆரோனும் சந்தித்தல்)

மெட்டு :- யேசு மறை காக்க ............ குருதியில்
மலர்ந்த அன்பு மறை

## மோயீசன் தரு

அன்பு மிகுந்தேவன் நன்னெறி தன்னிலே
ஆரோனைக் காண்கின்றேனே கனிவாய்
இன்னல்கள் தீர்ந்து இஸ்ரேலியர் விடுதலை
ஈட்டுவர் திண்ணமதே விரைவாய்

## ஆரோன் தரு

கருணையின் உருவமாம் கடவுளின் கிருபையால்
காணப் பெற்றேனே உனைச் சோதரா
அருஞ் செயல் புரிந்திட அழைத்தார் உன்னை என்று
அறிவித்தார் உனைக் காணவே சோதரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மோயீசன் தரு

எல்லையில்லா எங்கள் வல்லதேவன் கொடும்
எகிப்தின் பிடி விடுத்தே எமைக் காப்பார்
சலப்பிரளயந்தன்னில் சாகாது நொவாவின்
சந்ததி காத்த தேவன் துயர் தீர்ப்பார்

### ஆரோன் தரு

எகிப்தினில் உனதுயிர் பறித்திடத் தேடியோர்
இறந்து பட்டார் பிறிதோர் பார்வோன் மன்னன்
எகிப்த்தினை ஆள்கின்றான் எமதிஸ்ரேல் மக்களோ
ஏங்கித் தவிக்கிராரே விடிவெப்போ

### ஆரோன் வசனம்

ஆண்டவர் எமக்குத் தந்த அறிவுறுத்தலின்படி பார்வோன் மன்னனைக் காண எகிப்துக்குச் செல்வோம்.

### மோசீசன்-வசனம்

ஆண்டவரின் அருளாலும் அருஞ்செயலாலும் இஸ்ராயேல் மக்களை விடுவிப்போம்

## காட்சி - 10

பாத்திரங்கள் :- பார்வோன், மோயீசன், ஆரோன், மந்திரி, தளபதி, மந்திரவாதிகள்
இடம் :- பார்வோன் அரண்மனை
மெட்டு :- இந்துமா கடலிலே .......... மாவீரன் சங்கிலியன்

### பார்வோன் மன்னன் வரவு

### தரு

இந்தரை புகழ் திறல் எகிப்து தேசமே
முந்தையர் நாங்களென் றெவரும் நேசமே
சிந்தையில் சீர்பெறு செம்மை வீசுமே
சுந்தர ராஜ கெம்பீர வாசமே
சந்தக்கவி பொழிய சந்திரக்கலை திகழ
இந்ரச் சபை முன் ராஜன் பார்வோன் வந்தேனே ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச்சகர் இறைபணி அறங்கள் பொலிந்திட
ஆலய மணிகள் சங்கீதம் ஒலித்திட
நீர் மிகு நயில் நதி செழுமை வழங்கிட
நில மெலாம் சூரியன் கதிரால் ஒளிர்ந்திட
சீர்கள் பெருகத் தங்கத் தேரில் பொருதும் வேங்கை
மார்பன் மரகதங்கொள் கொலு முன் செல்வேனே

மத்தள முரசொலி மகிழ்வு சூடிட
மங்கையர் இடை நெளிந் தாடிப் பாடிட
வித்தகர் கலை கல்வி கவிந்து கூடிட
வீசிடு சாமரை தென்றல் நீடிட
ரெத்னமுடி புனைந்து முத்து மணிக்கொலுவில்
மெத்தும் பவி சுடனே நித்தம் ஆள்வேனே

### அணு

நாற்றிசையும் போற்ற அரசாளுவேன்

### மந்திரி சந்தத்தாழிசை

யாழெடுத்து ஏழிசையில் பாணரெல்லாம் பாடவே
மேள வாத்தியம் முளங்க நர்த்தகிகள் ஆடவே
ஆழி ஏழின் அலைகள் பொங்கும் பேர் வலிமை கூடவே
நாளும் நாடு போற்ற மன்னர் நீடு புகழ் சூடவே

### சேனாதிபதி சந்தத் தாழிசை

சீருலாவு சிங்க செக ராசர் போற்று மார்பகா
காருலாவு இருள் கிளித்து ஒளிரும் கதிர் ஞறூபகா
போருலாவு பொங்கு படை எங்கும் புடை சூளவே
பேருலாவு மன்னர் இந்தப் பாருலகம் ஆளவே

### ஆரோன் ஆசரியம்

எண் திசை போற்றும் ஏத்தலே எகிப்தின்
எழில் சேர் பார்வோன் வேந்தே போற்றி
விண்ணின்று வந்த வேதமா முதல்வன்
விடுத்ததோர் சேதியே கேளீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணதாம் பாலை வனத்தில் இஸ்ரலேர்
மூன்று நாள் பயணித்தே ஆங்கு
பண்ணோடு பாடி பலி செலுத்திடவே
பணித் திட்டார் பரமனார் தாமே

திண்ணமாய் எம்மை விடுத்திடும் இலையேல்
தீராத கொள்ளை நோய் வாளால்
ஆண்டவர் அழிப்பார் நின்நாடும் அழியும்
அடுக்காது விடுப்பீர் போய்வரவே

### பார்வோன் ஆசரியம்

ஆர் அந்த ஆண்டான் ஆணையே செய்ய
அரசனென்றறியானோ என்னை
ஊர் பேர் தெரியா அவனை நான் உணரேன்
உதவாத கதைகள் பேசாதீர்

தேர் கொண்ட வேந்தன் தேசமாம் எகிப்தின்
தேவராம் ஓசறியஸ்றே என்றே
ஏராளமாக இருக்க நீர் அவரை
ஏளனஞ் செய்தே வேறோர் தெய்வப்

பேரினைச் செப்பி பெரிதாகப் புரட்சிப்
பயமூட்டி புலுடா காட்டாது
போரினில் வென்றே புறப்படும் அல்லால்
போக நான் விடேன் அறிந்திடுவீர்

### ஆரோன் வசனம்

எமது இஸ்ராயேல் மக்களுக்குப் பாலை நிலத்தில் மூன்று நாள் வழிப் பயணம் போக இசைவு தாரும் ஏனெனில் எங்கள் கடவுளாகிய ஆண்டவருக்குப் பலி செலுத்த வேண்டும் இல்லையேல் கொள்ளை நோயாலும் கொடுந்துன்பத்தாலும் உனது நாடு அழிவுறும் மக்கள் மடிவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பார்வோன் வசனம்

ஆர் அந்த ஆண்டவன் அவனை நான் அறியேனே (சிரிப்பு) ஆயிரம் தேவர்கள் இருக்க அவரிலும் பெரிய ஓசறியஸ் இருக்கஅடுத்தொரு ஆண்டவனா. அவன் ஆணைக்கு நான் அடங்குவதா (சிரிப்பு) பாலையில் மூன்று நாள் பயணமாம் பலியிட வேண்டுமாம். (சிரிப்பு) உங்கள் எண்ணப்படி விட்டுவிட நான் என்ன ஏவலனா நாட்டின் காவலன் நான் என் கட்டளைக்கடங்கி ஒடுங்கி இருங்கள் நாட்டை விட்டு ஓர் அடியெடுத்து வைக்கவும் இடங்கொடேன்.

## மோயீசன் தரு

மெட்டு :- சீரெழு சிங்களவமிச ............ கண்டி அரசன்

காலை இளங்கதிரொளி நேர்
கோலமணிக் கொலுவிருந்தாள் அரசே - இந்த
ஞாலத்தில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத
மூல பரம்பொருள் முத்தி செய்ய விடைதாரும்

## ஆரோன் தரு

பாருலகம் பிரபஞ்சங்கள்
படைத்துயிர்கள் காக்கும் சர்வேஸ்வரனே - அவர்
சீரடி போற்றியே நேர்மறை பற்றிட
நீர் விடை தந்தரசாளுவீர் நின்நாடு வாழும்

## பார்வோன் தரு

அடிமைகட்கோர் ஆண்டவனா
குடிமை நீங்கள் வேண்டுதல் செய்திடவோ - எங்கள்
கோடி கோடி தெய்வம் கும்படா வம்பிலே
மாட்டிடா ஓட்டமாய் ஓடிடுவீர் விரைவாக

## மோயீசன் தரு

தேசுலவும் தேர் வேந்தே
பாசமுடன் பாலை நிலம் ஏகி - எங்கள்
மாசில்லா நேசராம் ஈசன் பதம் தொழ
ஆசி தந்தால் தேச மெங்கும் புகழது வீசும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரோன் தரு

எங்கள் இறைபணி புரிய
துங்கனே நீர் எமைத் தடுக்கா விடுப்பீர் - எங்கள்
எங்கும் நிறை இறை ஏகபரன் மறை
எங்கும் பரவிடும் ஏற்கும் இவ்வையந்தான் பார்ப்பீர்

## பார்வோன் தரு

நீள் புவியின் நிலங்களெல்லாம்
ஆளுமெந்தன் அடிமைகள் நீர் எழுந்தே - எந்த
நாளும் எங்கள் தெய்வம் போற்றிடாப் புதுமறை
நாட்டில் புகுந்திட நாட்டின் வேந்தன் விடுவேனோ

## மோயீசன் வசனம்

எங்கள் ஆண்டவரின் அருஞ்செயலை அறிந்தாலன்றி நீங்கள் அஞ்சப் போவதில்லை

## மோயீசன் கலித்துறை

உலகெலாம் படைத்துக் கார்க்கும் ஒப்புமை இல்லா ஈசா
நலமெலாம் இழந்து வாடும் நல்லோராம் இஸ்ரேல் மக்கள் - வாழ்விலே
தொல்லைகளெல்லாம் நீங்க தூயோன் நின் பெருமை பேச
கோலினை நிலம் வீழ் விட்டேன் கொடும்பாம்பாய் ஆக்குவாயே

## மந்திரி வசனம்

ஆ..... மோயீசன் கையிலிருந்த கோல் கொடும் பாம்பாக மாறி விட்டது

## தளபதி வசனம்

விடப்பாம்பு படமெடுத்தாடுகின்றது இவர்கள் கூறிய கடவுளின் கைங்கரியந்தானோ

## பார்வோன் வசனம்

(சிரிப்பு) சித்து விளையாடுகிறார்கள் யாரங்கே வரட்டும் எமது மந்திர வாதிகள் அவர்கள் காட்டுவார்கள் செகசாலங்கள்

மெட்டு :- சங்கரா சிவ சம்புவே இவன் ....... தேவசகாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மந்திரவாதிகள் வரவு

### மந்திரவாதி I தரு

மண்ணில் மாயாஜாலம் காட்டும்
மந்திரவாதி நாமடா
விண்ணின் வான வில்லில் அம்பு
விடுக்கும் வீரர் நாமடா

### மந்திரவாதி II தரு

புவனம் ஏழின் பவனம் புகுந்து
புறப்படுவோம் நாமடா
தவஞ்சேய் ரிசிகள் திகைக்க வியக்க
சித்து விடுவோம் நாமடா

### மந்திரவாதி I தரு

உப்புக்கல்லை சித்தி நிக்கும்
சக்கரையாய் காட்டுவோம்
ஒப்புக் கொள்ளும் மூடர் இருப்பர்
உழைத்துப் பிழைப்போம் நாமடா

### மந்திரவாதி II தரு

மண்ணை அரைத்து மின்னும் மஞ்சள்
சந்தனமாய் மாற்றுவோம்
எண்ணிலடங்கா ஏச்சு மாச்சும்
எத்தர் நாங்கள் தானடா

### மந்திரவாதி I தரு

கண்ணைக்கட்டி காட்சி காட்டி
கலக்கும் வீரர் நாமடா
தண்ணீ காட்டி தாகிடுதத்தம்
தழுக்காய்ச் செய்வோம் நாமடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மந்திரவாதி II தரு**

பில்லி சூனியம் சிரட்டல் உருட்டல்
பித்தலாட்டம் காட்டுவோம்
இல்லாதொன்றை இருப்பதாக
இலங்க நாங்கள் காட்டுவோம்

**மந்திரவாதி I வசனம்**

மாமன்னா எம்மை அழைத்தது ஏன்மன்னா

**மந்திரவாதி II வசனம்**

மண்ணிலே விண்ணைக் காட்டவா

**மந்திரவாதி I வசனம்**

விண்ணிலே கண்ணைக் காட்டவா

**மந்திரவாதி II வசனம்**

மாடமாளிகைகளை மண்மேடாக்கவா

**மந்திரவாதி I வசனம்**

கூட கோபுரங்களை குப்பை மேடாக்கவா

**மந்திரவாதி II வசனம்**

கூறுங்கள் அரசே குறி சொல்கின்றோம்

**மந்திரவாதி I வசனம்**

குறியுங்கள் அரசே பொறிவைக்கின்றோம்

**மந்திரவாதி II வசனம்**

சொப்பனத்திற்கு பொருள் சொல்லவா

**மந்திரவாதி I வசனம்**

செப்புங்கள் செகசாலங்கள் செய்யவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பார்வோன் விருத்தம்

மானிலந்தனில் உயர்ந்த மாடங்கொள் எகிப்து தேச
மாதவ மந்ர தந்ர பில்லி சூனியக்காரரே நீர்
வானிருந் திறங்கி வந்த வல்லவராம் இவர் கடவுள்
வெல்லவே முடியாதென்றார் வென்று நீர் காட்டு வீரே

## பார்வோன் வசனம்

மந்திரவாதிகளே இதோ நிற்கும் மோயீசனும் ஆரோனும் மாயா ஜாலங்கள் காட்டி தங்கள் மக்களை விடுவித்துக் கொண்டு போகப் பார்க்கிறார்கள் இதோ மோயீசன் கையிலிருந்த கோல் பாம்பாக மாறி விட்டிருக்கிறது. நீங்களும் உங்கள் மந்திரக் கோல்களில் பாம்புகளைப் படைத்துக் காட்டுங்கள்.

மெட்டு :- கனலொடு முந்திய செந்நீயுடன் ................
தேவசகாயம்

## மந்திரவாதி I தரு

வருவீரே தேவா வருவீரே வந்து நீர் வெற்றியே தருவீரே
மரணம் மறுபிறப்பின் தேவா மாதேவா ஓசறீசத் தேவா

## மந்திரவாதி II தரு

சூரியக் கடவுளே றே தேவா சூனியந்தனில் நேரே வருதேவா
ஆரியக் கூத்துக்கள் ஆடிடுவோம் வேள்வித் தீயினில் வந்துடன் கூடிடுவீர்

## மந்திரவாதி I தரு

கொக்கரித் தெழுந்திடு அரவங்கள் கோரமுறு கொடும்பை சாசம்
அக்களிப்புடன் எழுந்தோடிவாரும் திக்குகள் அதிர்ந்திடச் சாடிவாரும்

## மந்திரவாதி II தரு

ஆயிரமாயிரம் தேவுக்களே ஆனந்தக் கூத்துக்கள் ஆடிவாரும்
ஓய்ந்திடா ஓங்கார உறுமலுடன் வேள்வித் தீயினில் வந்துடன் நடமிடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மந்திரவாதி I தரு

மோயீசன் கைபிடி கோலிலெழும் சூட்சுமப் பாம்புபோல் எங்கள் மந்ர
மாயக் கோல் பாம்புகள் படையெனவே படைத்திடுவீர் எங்கும்
புடைத்திடவே

## மந்திரவாதி II தரு

மாயாவி பேயாவி மந்ர தேவா பூதலம் பாதலம் புகுந்ததேவா
காயாது கனிதரும் கருத்த தேவா மந்ரக் கோலினில் குடியேறிப்
படம் எடுப்பீர்

## மந்திரி வசனம்

ஆகா எமது மந்திர வாதிகளும் நாகங்களை ஆக்கிவிட்டார்கள்

## தளபதி வசனம்

ஆமாம் சர்ப்பங்களைச் சமைத்து விட்டார்கள்

## மந்திரி வசனம்

ஆ... எமது மந்திரவாதிகளின் பாம்புகள் மோயீசன் பாம்புக்குப் பயந்து நடுங்குகின்றனவே

## தளபதி வசனம்

ஆ... மோயீசன் சர்ப்பம் மந்திரவாதிகளின் பாம்புகளை விழுங்குகின்றதே

## பார்வோன் விருத்தம்

செப்படி வித்தைகள் காட்டிச் செகத்தினை மயக்க மெத்தச்
செருக்குடன் வந்த மோசே ஆரோன் நீர் அறையக் கேளும்
இப்புவி பொடிபடினும் இஸ்ரேலரை விடவே நானும்
ஒப்பிடேன் உம் இருவர் உடலகம் பிளந்திடேனே

மெட்டு :- ஆழிப்பா ............ தேவசகாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மோயீசன் தரு

உடலென்ன உயிரதும் துச்சமே
உலகெலாம் படைத்த மெய்த்தேவனின்
அடிபற்றி பலியிடும் ஆவலைத்
தடுத்திடா விடுப்பீரே

### பார்வோன் தரு

தப்பியே ஓடிடத் தக்கதோர்
தந்திரம் தளுக்கு நீர் விடுகிறீர்
எப்படிப் பப்படம் காட்டினும்
ஏமாற நான் மாட்டேன்

### ஆரோன் தரு

சலம் பொங்கும் பிரளயந் தன்னிலே
உலகையே அழித்த எம் தேவனின்
கைவன்மை கண்டாலன்றி நீரும்
மெய்யாய் உணரீரே

### பார்வோன் தரு

ஆதியாய் ஓசறீஸ் றேயென
ஓதிடும் ஆயிரம் தேவுக்கள்
துதி செய்யா துடுக்கிடும் மடையரே
தடுப்பேனல்லால் விடேனே

### பார்வோன் வசனம்

அட்டமா சித்துக்களும் பெற்றிட்ட ரிஷிகளும் அரசன் என் பெயர் கேட்டால் அடங்கியே நடு நடுங்குவர். இட்டமா தெய்வங்களை இகழ்ந்துமே வேறோர் தெய்வப் பெயரினில் சித்துக்கள்காட்டி வென்றிட்டால் விட்டுவிடுவேனா மோயீசா ஆரோன் நீங்கள் எந்த விதமான பொம்மலாட்டம் காட்டிய போதிலும் போகவிடேன். எபிரேயரை போய் விடுங்கள் இங்கிருந்து இனி என் கண்களிலே விழித்தீர்களாயின் கொல்லப்படுவீர்கள் உம் போய் விடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோயீசன் சந்த விருத்தம்

மாசறு இறைவனை மதித்திடா மமதை கொள் மன்னனே மா கொடிய நாசங்கள் நிகழும் உன் எகிப்தின் மேல் கொடும் பத்து துன்பங்கள் நேர்ந்திடுமே
தேசத்தின் நடுவில் எம் தேவன் நடந்திடும் நேரம் முதற் பேறுகள் நீசரே உமதரும் தலை மக்கள் இறப்பரே நீரெம்மை வீடுப்பீரே

## மோயீசன் வசனம்

மமதை கொண்ட மன்னா எமது கடவுளின் கைவன்மை கண்டாலன்றி நீர் எமது இஸ்ராயேல் மக்களை விடுவிக்கப் போவதில்லை நீசரே உங்கள் எகிப்தின் மேல் முக்காலமும் காணமுடியாத மிகக் கொடிய பத்துத் துன்பங்கள் நேரும் முடிந்தால் உமது மந்திரவாதிகள் பில்லி சூனியக் காரர்களைக் கொண்டு அதைத் தடுக்கப்பாரும். இறுதியில் உங்கள் முதற் பேறுகள் தலை மக்கள் யாவரும் செத்தொழிவர் எகிப்தின் மேல் என்றுமே கேட்டிராத அழுகுரல் புலம்பல் ஒலிக்கும் அதன் பின் நீர் எமை விடுப்பீர். நாம் உமது கண்களில் விழிக்கோம். (ஆண்டவர் எகிப்தினைக் கடந்து செல்கையில்)

## காட்சி - 11

பாத்திரங்கள் :- எகிப்திய மக்கள், பார்வோன், மந்திரி, தளபதி
இடம் :- பார்வோன் அரண்மனை
மெட்டு :- காருண்னியனே கதிர்காமா .......... கண்டி அரசன்

## எகிப்து மக்கள் I தரு

நீரெல்லாம் ரத்தமாய்ப் போச்சே - நயில்
நதி வளர் மீனெல்லாம் செத்துமே போச்சே
நீர் தேங்கும் கால்வாய் குளங்கள் - ஆறு
நிசமாகச் சிகப்பாகி நாற்றமாய்ப் போச்சே

## எகிப்து மக்கள் II தரு

குளிக்கவும் நீரின்றிப் போச்சே - தாகம்
தணிக்கவும் நீரின்றித் தவிக்கவுமாச்சே
அழகிய நயில் நதி நீரும் - பார்க்க
அதிபயங்கர ரத்தச் சிவப்பதாய்ப் போச்சே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எகிப்து மக்கள் III தரு

வீட்டுக்குள் படுக்கைக்குள் புகுந்தே - பாய்ந்து
அடுப்புக்கள் தொட்டிக்குள் நிறைந்ததே தவளை
ஓட்டமாய் ஓடினேன் தப்ப - தவளை
கூட்டமாய்த் துரத்தவே வந்தேன் நான் செப்ப

## எகிப்து மக்கள் IV தரு

மாவு பிசைந்திடும் தொட்டி - அதில்
மட்டமாய் முட்டுதே தவளைகள் குட்டி
தேவனின் சாபமே பட்டே - கொள்ளைத்
தேரைகள் தவளைகள் குவியலாய் விட்டே

மெட்டு :- பொன்னிற் சிறந்திடு ........... சங்கிலியன்

## எகிப்து மக்கள் I மறுதரு

காரிருள் மூடியே நாளது மூன்றாச்சு
கருமையே தெரியு தெங்கும் - பார்வைமங்கி
வெறுமையே நிறையுதெங்கும்

யாரையும் பார்க்கவும் இயலாது தவிக்கின்றோம்
இருந்த இடம் விட்டு நகராது முழிக்கின்றோம்
கோர இருள் கொட்டிக் கண்ரெண்டும் கெட்டதே
குவலயம் அருணனின் கதிரின்றிப் பட்டதே

மெட்டு :- அன்பே என் ஆருயிரே ........... பண்டார வன்னியன்

## எகிப்து மக்கள் II மறுதரு

எகிப்தின் நடுவில் அந்த இறைவன் நள்ளிரவினில்
ஏகி நடந்தார் அந்தோ இழவாச்சுதே
அரசன் தலை மகனும் அடிமைப் பெண் தலைமகன்
ஈறாய் இறந்தே பட்டார் இனி என்செய்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எகிப்து மக்கள் III தரு

ஏழை இஸ்ரேலியரை இழிவு செய்தோமே அந்த
ஊழ்வினை சூழ்ந்ததன்றோ வீழ்ந்தோமே இன்று
நாளாக நாளாக நம் தேசம் அழியுதே
நாம் முந்தி அனுப்பிடுவோம் இஸ்ரேலியரை

### எகிப்து மக்கள் IV தரு

அரசே எகிப்தில் பெரும் அழுகுரல் சாவுகளால்
அவலப்படுகின்றதே புலம்பி மெத்த
நிருபா இஸ்ரேலியர்கள் அடிமை விடுத்தே ஏக
விரைவாய் உத்தாரம் தாரும் வினயமதாய்

### (பார்வோன் அரண்மனையில்)

### எகிப்து மக்கள் I வசனம்

மகாராசா எல்லோரும் சாகின்றோம். எகிப்தே அழுகின்றது அழிகின்றது

### எகிப்து மக்கள் II வசனம்

நீரெல்லாம் இரத்தமானது அதிலுள்ள மீனெல்லாம் செத்தது.

### எகிப்து மக்கள் III வசனம்

குளிக்கவும் நீரில்லாமல் போனது. குடிக்கவும் நீரின்றிப் போனது

### எகிப்து மக்கள் IV வசனம்

தவளைகளால் நாடு நிறைந்தது. கொசுக்களால் தேசம் குட்டிச்சுவரானது

### எகிப்து மக்கள் I வசனம்

எகிப்தெங்கும் என்றுமே கேட்டிராத அழுகுரல் புலம்பல் எழுகின்றனவே

### எகிப்து மக்கள் II வசனம்

வேந்தே அந்த இஸ்ரவேலியரின் கடவுளுக்கு எதிர் நமது தெய்வங்களால் நிற்க முடியவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எகிப்து மக்கள் III வசனம்

அந்த இஸ்ரவேலியர்களைப் போகவிடுங்கள் மன்னா போகவிடுங்கள்

## எகிப்து மக்கள் IV வசனம்

அந்த இஸ்ரவேலியர்களைப் போகவிடுங்கள் மன்னா போகவிடுங்கள்

## பார்வோன் வசனம்

நிறுத்துங்கள் உங்கள் கூக்குரல்களை.
நான் எனது மந்திரி பிரதானிகளோடு ஆலோசித்து முடிவெடுக்கின்றேன்.
அதுவரை நீங்கள் அமைதியாயிருங்கள்.
எனது தலைமகனும் இறந்தே கிடக்கிறான்

## பார்வோன் தரு

மெட்டு :- இங்கிருதலங்கிதே .............. எஸ்தாக்கயர்

யுத்தி சித்தி மெத்தப் பெற்ற மந்திரி
யூகமாய் வித்தைகள் கற்ற தந்திரி
இத்தனை காலம் நாம் கண்டோம் ஏற்றம்
இனிவரும் காலந்தான் தருமோ மாற்றம்

## மந்திரி தரு

காலத்திற் கேற்றதாய் கோலம் வேண்டும்
கலங்கினால் தெளிந்திடும் சித்தம் வேண்டும்
ஞாலத்தில் இது ஒன்றும் புதுமை இல்லை
நாட்டை விட்டோட்டுவோம் இஸ்ரவேலை

## பார்வோன் தரு

திட புய வலிமைசேர் படைத்தலைவா
திசையெட்டும் தீரங்கொள் சேனைக்கதிபா
அடிமை இஸ்ரேலரை விடவோ நாங்கள்
அவர் போனால் எவர் செய்வார் அவர்கள் வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தளபதி தரு

அடிமையை விடுத்திடல் அவமானமே
அடக்கியே ஆண்டிடல் உவமானமே
எடுபிடி எபிரேயர் எழுந்திடவோ
முடி கொண்ட எகிப்தியர் வீழ்ந்திடவோ

### பார்வோன் தரு

வருபொருள் உரை புகழ் அமைச்சரேற்ரே
வருவினை கருகிட வழிதானே தோ
அரும் புகழ் எகிப்துமா தேச மக்கள்
அழிய இஸ்ரேலரை வழிவிடவோ

### மந்திரி தரு

நவரெத்ன முடி புனை நாட்டின் வேந்தே
நலம் வேண்டில் நாம் அந்த எபிரேயரை
அவர் தேவன் வழிபட விடுவோமானால்
அவலங்கள் விலகிடும் சுபமே சூழும்

### பார்வோன் தரு

நாற்படை கொண்டெழு நாயகனே
நாட்டினைக் காத்திடும் சேவகனே
ஆற்றல் மிகு இஸ்ரவேலர் தெய்வம்
அவர்கட்காய் போரிடில் என்ன செய்வோம்

### தளபதி தரு

பாரேழு கண்டங்கள் ஓரணியாய்
போர் முளங்கி வரின் வென்றிடுவேன்
நிகரில்லா ஓர் சக்தி நியாயம் வேண்டி
செகத்தினில் தீர்ப்பிடில் செய்வதென்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பார்வோன் விருத்தம்

செப்பரும் மதிவல்லோனே செயந்திகழ் புயமல்லோனே
ஒப்பரும் தேவன் எம்மை ஒழித்திடா விழிப்போடே நாம்
தப்பியே பிழைக்க வேண்டில் தயவுடன் இஸ்ரவேலர்
இப்போதே புறப்பட்டோட ஒப்பிட்டேன் விடுத்திடீரே

### பார்வோன் வசனம்

மந்திரி பிரதானிகளே சேனைத்தலைவரே நாம் எத்தனை பேரிழப்புகளைத்தான் தாங்கிக் கொள்வது. மக்களும் தேசமும் அழிந்தபின் இராட்சியந்தான் இருந்தென்ன பயன் மக்களின் வேண்டுதலின் படியும் உங்களின் யோசனையின் படியும் அந்த இஸ்ரேலியர்களைப் போக விடுகின்றேன். எவ்வளவு விரைவாக அவர்கள் போக முடியுமோ அவ்வளவு விரைவாகப் போகட்டும் உம்துரத்தி விடுங்கள் அவர்களை.

## காட்சி - 12

(மோயீசன் இஸ்ரேல் மக்களை அழைத்து போதல்)

மெட்டு :- ஆகமுமாய் ....... தேவசகாயம்

### மோயீசன் தரு

மீட்டுச் செல்வேன் என் இஸ்ரேல் மக்களை
கூட்டிச் செல்வேன் வாக்களித்த தேசம்
ஈட்டிச் செல்வேன் வெற்றியே தந்த தேவன்
காட்டிய வழி தனிலே

### ஆரோன் தரு

காலை வேளை கருமேகந்தனில் வழி
மாலை நேரம் ஒளி மேகமாய்ப் பாதை
சாவையில்லாப் பாலை கடந்து நல்-
சோலை கானான் நாட்டிற்கே

### மோயீசன் தரு

எரியும் புதர் கருகிடாதே ஒளிர்
நெருப்பின் தேவன் உரையின் படியே
விரைந்தே சீனாய் மலையடி வாரமே
சிரசே தாழ்த்தி தொழுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 12

பாத்திரங்கள் :- இஸ்ரேலிய மக்கள், மோயீசன், ஆரோன்
இடம் :- பாலைவனம்

### இஸ்ரேலிய மக்கள் I தரு

மெட்டு :- பெடியராகிய மூடர்களே ....... சங்கிலியன்

விடுதலை வென்றோம் வேகமே கொண்டோம்
வீறுடன் எழுந்து நாம் பேரணி கண்டோம்
அடிமைகள் குடிமைகள் அற்றிட விண்டோம்
ஆண்டவன் அருள்பல பெற்றிட நின்றோம்

### இஸ்ரேலிய மக்கள் II தரு

எகிப்தியர் ஏமை வதைத்திட கண்டு
ஏங்கியே இஸ்ரேல் பதைத்திடல் கண்டு
மகிமை கொள் ஈசன் மாண்புறு மாட்சி
மக்களுக்களித்தார் மகிழ்வோடு மீட்சி

### இஸ்ரேலிய மக்கள் III தரு

கட்டளைக் கடங்கி கலங்கியே நின்றோம்
கை கட்டி வாய் பொத்தி கதியற்று நின்றோம்
வெட்டிடும் வாள் முன் வீழ்ந்திட நின்றோம்
விமலனின் அருளால் மீட்சியே கண்டோம்

### இஸ்ரேலிய மக்கள் IV தரு

ஆண்டவர் எங்கள் வேண்டுதல் கேட்டார்
அருள் மழை பொழிந்தே அவலங்கள் தீர்த்தார்
மாண்போடு மேகத் தூண்களாய் எம்மை
மணல் வனந்தனில் வழி நடத்தியே சென்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ரேலிய மக்கள் V தரு

பயந்துடல் நடுங்கிப் பதை பதைத் தேங்கிப்
படிதனில் வீழ்ந்தே அடிமையாய்க் கிடந்தோம்
தூயவர் நேயவர் இறையனார் எங்கள்
துயரங்கள் தீர்த்தால் செயம் எமங்களித்தார்

## இஸ்ரேலிய மக்கள் VI தரு

அருள் நிறை தேவன் கிருபையால் எங்கள்
அடிமையை உடைத்தார் விடுதலை கொடுத்தார்
வருவினை அகல மருளது விலக
வந்தருள் புரிந்தார் சிந்தையில் நிறைந்தார்

## இஸ்ரேலிய மக்கள் VII தரு

அடல் பெரும் சேனை கொடி கொற்றம் கொண்டே
அடக்கியே ஆண்டார் தடுத்துமே நின்றார்
கடவுள் கைவன்மை கண்டிடக் கலங்கி
கெடி கொண்டு நின்றார் அடிமையை விடுத்தார்

## இஸ்ரேலிய மக்கள் VIII தரு

நாடில்லா நலிந்து நாடோடியாகி
நயில் நதி தேசம் எகிப்தினில் வாழ்ந்து
அடிமையாய் அல்லல் பட்டுமே வீழ்ந்தோம்
ஆண்டவர் அருளால் மீண்டுமே வந்தோம்

## (மோயீசன் இஸ்ரேல் மக்களை அழைத்துப்போதல்)

மெட்டு :- ஆகமமாய் ............. தேவசகாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 13

பாத்திரங்கள் :- பார்வோன், மந்திரி, தளபதி

இடம் :- பார்வோன் அரண்மனை

மெட்டு :- கொடியசங்கிலி அடிதனைவிட ......... மாவீரன் சங்கிலியன்

### பார்வோன் தரு

அடிமை எபிரேயர்விடுத்து நாம் பெரும் மடமைபுரிந்துவிட்டோம் - எங்கள்
நெடிய படையொடு இடையில் மடக்கியே பிடித்து நாம் வருவோம்

### மந்திரி தரு

எங்கள் எகிப்தினைச் சூறையாடியே எங்கவர் சென்றார் - அவர்
எங்கும் சென்றிடா தங்கும் இடமதில் பங்கம் செய்திடுவோம்

### தளபதி தரு

கண்ட கோடரி குத்து ஈட்டிவாள் கொண்டு சுற்றிவந்தே - அவர்
கண்ட துண்டமாய் கொன்று உடலங்கள் கண்டு குதித்திடுவோம்

### பார்வோன் தரு

பரிகள் கரிகளோடெழுந்த ரதங்களும் நிரையுற விரைந்தே - பெரும்
வீரமோ டெபிரேயர் தப்பிடா வியூகம் செய்திடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மந்திரி தரு

தங்க இடமின்றி எங்கட்க்கடிமையாய் இருந்த இஸ்ரேலியர்கள் - இன்று
செங்கடல் கடந்தோடிப் போகு முன் சேர்த்து நாம் பிடிப்போம்

## தளபதி தரு

ஈட்டி வாளுடன் எறிவேல் கிறிசுகள் காட்டியே கலக்கே - இஸ்ரேல்
ஓட்டமாய் ஓடா நீட்டமாய்ப் பெரும் கூட்டமாய்ப் பிடிப்போம்

## பார்வோன் சந்தத்தாழிசை

மண்டலங்கள் கோடி கோடி துண்டதாகி வீழினும்
கண்டம் ஏழும் ஒன்றெழுந்து நின்று சமராடினும்
கண்ட மாருதங்கள் கொண்டி ஸ்ரேலியர்கள் தப்பிடா
விண்டலங்கள் கண்டு கெடி கொண்டிட மடக்குவோம்

## பார்வோன் வசனம்

இஸ்ரவேலர் நெடுந்தூரம் போயிருக்க முடியாது துரத்திச்சென்று பிடித்து வருவோம். அணிதேர்ப்புரவி ஆட்பெரும் படைகளும் ஆயத்தமாகட்டும் முரசுகள் ஒலிக்கட்டும் பேரிகைகள் முளங்கட்டும். புறப்படுங்கள்

## காட்சி - 14

பாத்திரங்கள் :- மோயீசன், ஆரோன், இஸ்ரேலியமக்கள், பார்வோன், மந்திரி, தளபதி
இடம் :- பாலைவனம், செங்கடல்
மெட்டு :- (i) முரசொலி முழங்கும்
(ii) பேரிடியாய் பொடிபடும் ..... நாளியாநாயகன்

## இஸ்ரேல் மக்கள் I தரு

மடை கொண்ட நெடுங்கடல் போலே - பெரும்
படை கொண்டே பார்வோன் வருகின்றான்
கடல் எதிர் தடை போடுதே - எங்கள்
முடிவதே இனி நொடியதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பார்வோன் தரு

சென்றிடுவோம் சென்றிடுவோம் - விரை
கொண்டு சுழல் சண்ட மாருதமாய்
கொன்றிடுவோம் கொன்றிடுவோம் - எங்கள்
கடவுளாம் ஓசறீஸ் மகிழ்ந்திடவே

### இஸ்ரேல் மக்கள் II தரு

தேர்ப்படையோடே தரைப் படை - தாவும்
புரவியோடெதிரே வேற்படை
நாற்படை எம்மை நெருங்குதே - சர்வ
நாசமே ஈசா காருமே

### மந்திரி தரு

அடிமைகட்கோர் விடுதலையாம் அவர்
அணி அணியாய் நடை போடுகின்றார்
தடுத்திடுதே கடல் அலைகள் அவர்
தவித்திடும் முயல் நாங்கள் தாக்கிடுவோம்

### இஸ்ரேல் மக்கள் III தரு

விதியிதா எவர் சதியிதா - எங்கள்
வினையிதோ நாங்கள் அழிவதோ
கதியிதோ காரும் கடவுளே - தேவ
கத்தனே அருள் நித்தனே

### தளபதி தரு

பேரிகைகள் கொட்டிடுவோம் பெரும்
பிணந்தின்னும் பேய்க்கிரையிட்டிடுவோம்
வீரியத் தோடாயுதங்கள் வீசி
விரைவில் இஸ்வேலரை வீழ்த்திடுவோம்

### இஸ்ரேல் மக்கள் IV தரு

மலையதே பெயர்த்து விரைவுற - நம்மை
மோதவே வரும் வாறதாய்
தொலைக்கவே பார்வோன் துரத்துறான் - நாங்கள்
துகளாவோம் மண்ணின் நிகளாவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ரேல் மக்கள் V தரு

பிரளயம் பொங்கி வருதல் போல் - பார்வோன்
படையதே விரைந்தே வருகுதே
விரிகடல் மறு புறமதாய் - நாங்கள்
சிறகதே இழந்த பறவைதான்

## இஸ்ரேல் மக்கள் VI தரு

எரிமலை வெடித்தே வருபெரு - நெருப்பாய்
பேர் படை பொங்கி வருகுதே
நேருமோ பெரும் கோரமோ - ரத்த
ஆறதே நாங்கள் நீறதே

## இஸ்ரேல் மக்கள் VII தரு

வேலொடு கண்ட கோடரி - கொல்லும்
வாளொடு ஈட்டி கிறிசுகள்
வில்லொடு விரையும் கணைகளும் - எம்மை
கொல்லவே பாய்ந்தே வருகுதே

## இஸ்ரேல் மக்கள் VIII தரு

இடியொடு நெடும் மின்னலும் - கூடி
இரைந்திங்கே விரைந்து வருதல் போல்
முடியுடை பார்வோன் படையொடு - தேடி
பிடிப்பானோ உயிரைக் குடிப்பானோ

## பார்வோன் தரு

கார்முகிலின் பேரிடி எனப் பெரும்
போர்ப்படை கொண்டெதிர் சென்றிடுவோம்
கார் கடலின் நேரெதிரே பெரும்
கோரமே விளைந்திடக் கொன்றிடுவோம்

## மந்திரி தரு

எரிமலையின் பெரு நெருப்பாய் அவர்
எதிரினில் குதித்துமே எழுந்திடுவோம்
நரபலிகள் செலுத்தி இஸ்ரேலியர்
குருதியில் குளித்துமே களித்திடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தளபதி தரு

தேரெழுமோர் பேரணியாய் பெரும்
புயலதன் விரைவொடு பாய்திடுவோம்
கூரெறிவேல் கொண்டெபிரேயரை
கூறு கூறாய்க் கிழித்தெறிந்திடுவோம்

## பார்வோன் தரு

சுட்டெரிக்கும் செஞ்சுடரோன் கதிர்
பட்டிடக் கரைந்திடும் பனியதுபோல்
வெட்டிடுவோம் கூட்டமதாய் உயிர்
குடித்துமே வெறியது தணித்திடுவோம்

## மந்திரி தரு

மலையெனவே பலமுறவே விரை
அலை அலையாய் நாம் பாய்ந்திடுவோம்
உலையெறியும் கனலெனவே கொடும்
கொலையது புரிந்துடல் சாய்த்திடுவோம்

## தளபதி தரு

மடைதிறந்த நெருப்பாறாய் அவர்
நடுவினில் பாய்ந்துடன் மடக்கிடுவோம்
விடுதலையே வென்று ஓடும் அவர்
விடுபடா நொடியினில் ஒடுக்கிடுவோம்

## பார்வோன் சந்தவிருத்தம்

கருமேக உருவாக தூணொன்று தோணுதே காரிருள் மூடிடுதே
எரிகின்ற நெருப்பாக அனல் பொங்கி வீசுதே இருவிழி உருகிறதே
அருகில் இஸ்ரவேலர் இருப்பரோ இல்லையோ ஒருகால் தப்பிவிட்டாரோ
துருவி ஆராய்ந்து நாம் துரத்தி இஸ்ரேலர்கள் மருள மடக்கிடுவோம்

## பார்வோன் வசனம்

ஆ..... இது என்ன விந்தை கருமேகம் வந்து எமது கண்களை மறைக்கின்றதே காரிருள் மூடி இஸ்ரவேலியர்களைக் காண முடியாதிருக் கின்றதே. எமது கண்கள் அனலால் உருகின்றனவே. இஸ்ரவேலர் தப்பி விடப் போகின்றார்கள். துருவி ஆராய்ந்து வழி கண்டு பிடியுங்கள் துரத்திச் செல்லுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இஸ்ரவேலிய மக்கள் I வசனம்
ஐயோ பார்வோன் படைகள் நம்மைத் துரத்தி வருகின்றன

### இஸ்ரவேலிய மக்கள் II வசனம்
தேர்கள் குதிரைகள் வீரர்களோடு பார்வோன் நம்மைத்துரத்தி வருகின்றான்

### இஸ்ரவேலிய மக்கள் III வசனம்
ஒருபக்கம் கடலலைகள்

### இஸ்ரவேலிய மக்கள் IV வசனம்
மறுபக்கம் படையணிகள்

### இஸ்ரவேலிய மக்கள் I வசனம்
இனி ஓடித் தப்புவதற்கு இடமேயில்லை

### இஸ்ரவேலிய மக்கள் II வசனம்
நாம் மடிய வேண்டியது தான்

### இஸ்ரவேலிய மக்கள் III வசனம்
பார்வோன் படைகள் நம்மை நெருங்கிவிட்டன.

### இஸ்ரவேலிய மக்கள் IV வசனம்
மோயீசா எகிப்தில் எமக்குச் சவக்குளிகள் இல்லையென்றா எங்களைப் பாலை நிலத்துக்கு கூட்டி வந்தீர்

### இஸ்ரவேலிய மக்கள் I வசனம்
நாங்கள் அங்கேயே எகிப்தியருக்கு ஊழியம் செய்து பிழைத்திருக்க விட்டிருக்கலாமே

### இஸ்ரவேலிய மக்கள் V வசனம்
எகிப்தியரைப் பகைத்து வந்து பாலை வனத்திலேயா நாம் சாகவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ரவேலிய மக்கள் VI வசனம்

அவலமாய்ச் சாகவோ அழைத்து வந்தீர் எங்களை

## மோயீசன் வசனம்

அஞ்சாதீர்கள் நிலை குலையாதீர்கள் இன்று ஆண்டவர்தாமே உங்களுக்காக ஆற்றும் விடுதலைச் செயலைப் பாருங்கள். இன்று நீங்கள் காணும் எகிப்தியரை இனி என்றுமே காணப்போவதில்லை. ஆண்டவரே உங்களுக்காகப் போரிடுவார்.

## மோயீசன் அகவல்

அண்டம் பிரபஞ்சம் அனைத்தையும் படைத்த
ஆண்டவா அடியோர் அவலங்கள் பாராய்
நீண்ட நாள் அடியாய் இருந்து நாம் மீண்டோம்
மூண்டதோர் பழியோ தூண்டினிற் புளுவோ
மாண்டிடத் தானோ ஒளிமேகத் தூணாய்
மாண்போடு எம்மை அழைத்து நீர் வந்தீர்
தாண்டி நாம் போக தடுத்திடும் கடல்தான்
வேண்டுதல் கேட்டே விலகிட அருள்வாய்

## தரு

மெட்டு :- செந்தூர் உறைகந்தா ............ கட்டபொம்மன்

சருவேஸ் பரா வரமே தாராய்
தருணம் நீயும் வாராய்
நீரின் திரள் பிரிந்தே கடல்
தரையாய்ப் பாதை சமைப்பாய்

பார்வோன் படை பாய்ந்தேவரின்
நேரும் துன்பம் தீரும்
தரணி காணாப் புதுமை இங்கு
தருவாய் சருவேசா

நீரே உண்மைத் தெய்வம் இந்தப்
பாரே பறை சாற்றும்
பாரா முகம் ஏனோ தேவா
நீரில் பாதை தாராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோயீசன் வசனம்

அண்டசரா சரங்களையும் அதிலுள்ள ஜீவராசிகளையும் படைத்துக் காக்கும் ஆண்டவா சலப்பிரளயத்திலே நோவா சந்ததி சாகாமல் காத்த தேவா நீர் ஒருவரே கடவுள் என்ற உண்மையை இந்த உலகெல்லாம் உணர்ந்து கொள்ள பாய்ந்து வரும் பார்வோன் படைகளிடமிருந்து உமது இஸ்ராயேல் மக்களைப் பாதுகாக்க இந்தச் செங்கடல் பிரிந்து தரை வழி காட்டியருள்வாய் இறைவா.

**(செங்கடல் பிரிந்து வழிவிட கடலின் நடுவே உலர்ந்த தரையின் ஊடாக இஸ்ரேலிய மக்கள் செல்கின்றனர்)**

## பார்வோன் விருத்தம்

கடலது பிளந்து நெடுந் தரையதாய்ப் பாதை காட்ட
கடகட வென இஸ்ரவேலர்கள் நடையாய்ப் போறார்
படையது கொண்டே அந்தப் பாதையால் பாய்ந்து சென்றே
விட்டிடா விரட்டி நாங்கள் கூட்டமாய்ப் பிடித்திடுவோம்.

## பார்வோன் வசனம்

என்ன அதிசயம், அற்புதம் மோயீசன் கையிலுள்ள கோலினால் செங்கடலைப் பிரித்து விட்டான் இஸ்ரேலியர்கள் கடலுக்கூடாக தரைவழியே நடக்கிறார்கள். விடக் கூடாது மடக்கிப்பிடிக்க வேண்டும். புறப்படுங்கள்

## மோயீசன் இன்னிசை

நீரை விட்டே நீர் பிரிந்தே நிலமதாகி நாம் நடக்க
பார்வோன் படைகள் பாய்ந்தே பின்னால் துரத்தி வருதே தொடரோ துன்பம்
காரும் தேவா கதியொன்றில்லை கணத்தில் பிரிந்தே கடல்தான் பொருந்தி
தேர்கள் புரவி படைகளோடு பார்வோன் மூழ்கபரனே அருள்வாய்

## மோயீசன் வசனம்

தஞ்சமென்று வந்தவர்க்கு அஞ்சாதே என அபயமளிக்கும் ஆண்டவா திரை கிளித்துத் தரை வழி காட்டிய அற்புதா அகிலமே வியக்கும் உன் வல்லமையினால் பிரிந்தகடல் பொருந்தி தேர்களொடும் குதிரைகளோடும் பார்வோன் படைகள் அதிலே மூழ்கிப் போக அருள் புரிவாய் ஆண்டவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 15

பாத்திரங்கள் :- மோயீசன், ஆரோன், இஸ்ரேலிய மக்கள்
இடம் :- பாலை வனம்

### இஸ்ரவேலிய மக்கள் I வசனம்

இந்தப்பாலை நிலத்திலே எமக்கு உணவு எப்படிக் கிடைக்கப்போகிறது. நாங்கள் எதைச் சாப்பிட்டு உயிர் வாழ்வது.

### இஸ்ரவேலிய மக்கள் II வசனம்

எகிப்திலே இறைச்சிப் பாத்திரத்தின் அருகில் அமர்ந்து அப்பம் உண்டு நிறைவடைந்து அங்கேயே நாங்கள் இறந்திருந்தால் எவ்வளவு நலமாயயிருக்கும்.

### இஸ்ரவேலிய மக்கள் III வசனம்

பசிபட்டினியால் வாடி மடியவோ எங்களை இந்தப் பாலைவனத்துக்கு இழுந்து வந்தீர்.

### இஸ்ரவேலிய மக்கள் IV வசனம்

இந்தப் பாலை நிலத்திலேயா எங்களுக்குப் புதைகுளிகள்

### மோயீசன் தரு

மெட்டு :- மானிலம்போற்ற வாழ்ந்தேன் ...... வள்ளல் குமனன்

அடிமைத்தாள் உடைத்த தேவா - எங்கள்
அவலங்கள் துடைத்த தேவா
மடியவோ பசியால் பாலை - மண்ணில்
மறையவோ முறையோ தேவா

விரிகடல் தரையதாகி - செகம்
வியந்திட வழி சமைத்தாய்
எரியுதே வயிறு பற்றி - நெஞ்சம்
ஏங்குதே உறுதியற்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரியும் முட் செடி கருகா - அதில்
அருள் ஒளி ஈந்த தேவா
மருள் அகன்றிடவே மக்கள் - பசி
தீர்ந்திட உணவளிப்பாய்

### மோயீசன் வசனம்

கருகாது எரியும் முட்செடியின் நடுவே அருள் ஒளி ஈந்த இறைவா உம்மில் வைத்த நம்பிக்கையை மட்டுமே நெஞ்சில் கொண்டு இக் கொடிய பாலை நிலம் வழியே உமது இஸ்ராயேல் மக்களைக் கூட்டி வந்துள்ளேன். இங்கு நாம் விதைக்கவும் இல்லை அறுக்கவும் இல்லை உணவுக்கு எங்கே போவது பசியால் வாடி மடியும் மக்களைப் பாதுகாத்தருள வேண்டும் இறைவா.

அதோ ஆண்டவர் வானத்திலிருந்து அப்பத்தைப் பொழிகின்றார். உங்களுக்குத் தேவையானதைச் சேகரித்துக் கொள்ளுங்கள்.

### இஸ்ரேல் மக்கள் I வசனம்

குடிப்பதற்கு தண்ணீர் இல்லையே

### இஸ்ரேல் மக்கள் II வசனம்

இந்தப் பாலையில் எங்கே தண்ணீர் கிடைக்கப் போகிறது

### இஸ்ரேல் மக்கள் III வசனம்

தண்ணீர்த் தாகத்தால் சாகின்றோம்

### இஸ்ரேல் மக்கள் IV வசனம்

எங்களுக்குத் தண்ணீர் தாரும்

### இஸ்ரேல் மக்கள் I வசனம்

எகிப்திலிருந்து எங்களை வெளியேறச் செய்தது எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் தாகத்தால் சாகடிக்கவா

### இஸ்ரேல் மக்கள் V வசனம்

உணவிலும் மேலானது தண்ணீர் அல்லவோ தண்ணீரின்றி எப்படி உயிர்வாழ முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ரேல் மக்கள் VI வசனம்
தண்ணீர்த் தாகத்தால்நாங்களெல்லாம் செத்து மடிந்த பின் யாரை அழைத்துப் போகப்பொகிறீர்

## மோயீசன் தரு

மெட்டு :- சந்தமரிதிரு ................. ஜெசிவன்

பருகிட நீரின்றி பாலையில் பதைக்கின்றார்பாராயோ - பெரும் விருட்சம் விழுந்திட உதிரும் சருகுகள் எரிந்து கருகிடும் நிலை இஸ்ரேலர்க்கோ

## தரு
நாவது உலர்ந்திட நெஞ்சும் வரண்டிட நலிகின்றார் - அவர் சீவன் தவித்திடத் தாகம் தணித்திடா தேவனே என்ன பாவம் செய்தாரோ

## தரு
வெப்பத்தின் காற்றிலும் அனலிலும் மணலிலும் உருகின்றார் - தேவா அப்பம் பொழிந்துணவளித்து உயிர் காத்தாய் இப்போ தண்ணீரின் தாகம் தீர்த்திடாய்

## மோயீசன் வசனம்
இறைவா வானத்திலிருந்து மன்னா எனும் அப்பத்தைப் பொழிந்து எங்கள் பசிப்பிணி தீர்த்த ஆண்டவா இப்போ தண்ணீர்த் தாகத்தால் தவித்துத் தத்தளிக்கும் இஸ்ராயேல் மக்களின் பால் உமது இரக்கத்தைக் காட்டியருளும் தேவா

## இஸ்ரேல் மக்கள் I வசனம்
நாம் மனிதர்களா மிருகங்களா

## இஸ்ரேல் மக்கள் II வசனம்
கண்ட பாட்டில் வாழ்கின்றோமே

## இஸ்ரேல் மக்கள் III வசனம்
மனிதருக்கும் மிருகத்துக்கும் வித்தியாசம் இல்லையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இஸ்ரேல் மக்கள் IV வசனம்

நாம் வாழுவதிற்கு ஒரு வழிமுறை வேண்டாமோ

### இஸ்ரேல் மக்கள் I வசனம்

சட்டங்கள் விதி முறைகள் ஒன்றும் இல்லையோ

### இஸ்ரேல் மக்கள் II வசனம்

எங்கள் இஸ்ராயேல் இனத்துக்கென்று தனித்துவமான பண்பாடுகள் வேண்டாமோ

### மோயீசன் வசனம்

ஆம் கடவுளின் மக்களாகத் தெரிந்தெடுக்கப்பட்ட எமது இஸ்ராயேல் சனங்களுக்கு குருத்துவ இனமாக உயர்த்தப்பட்ட மக்களுக்கு வாழும் நெறிமுறை காட்ட அவர்களுக்குரிய சட்ட திட்டங்களைப் பெற்றிட இப்போதே நான் கடவுளின் இடமாய் சீனாய் மலைமீது ஏறிப்போகிறேன் ஆரோன் மக்கள் உமது கண்காணிப்பில் இருக்கட்டும்

## காட்சி - 16

பாத்திரங்கள் :- மோயீசன்
இடம் :- சீனாய் மலை

### மோயீசன் வண்ணத்தரு

கட்டளை வேண்டி எங்கள் கடவுளின் இடமாய் நானும்
கடவுளின் மலையாம் சீனாய் மலை மீது மாசில்லா நேசராம்
கடவுளின் கருத்துக்கள் கண்டிடகுருத்துவ மக்களாய்க் கொண்டிட
மேடுகள் பள்ளங்கள் தடைகளைத் தாண்டியே தாவியே ஏறியே
காரணன் புரியாத பரிசுத்தன் நிருமலன் தாரணி படைத்துயிர்
காத்திடும் பூரணன்
சீரடிதனைச் சிரமேற்கொண்டு அவர்தரும் நேர் மறை பற்றிட
நிலமெலாம் போற்றிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியில்லாத மக்கள் முறுமுறுத்தார்கள் மெத்த
பொறுதியே கொண்டவர்கள் குறைகளை இறைவனிடம்
முறையிட்டே நெறி முறை கற்றிட கறைவற்ற இறைநெறி பெற்றிட
இறையனார் உறைகின்ற எழில் சீனாய் மலை மீது உறுதி
கொண்டேறியே
அருள் பிரகாசமே தருகவி விடுதலைப் பயனத்தின் பயன்பெற
பாதெல்லாம் நிறைவுற
அருமறை அவர் தரு திருமுறை வேண்டியே மருள் அகன்றிட
ஈசன் இடமதை அண்டியே

## காட்சி - 17

பாத்திரங்கள் :- ஆரோன், இஸ்ரேலிய மக்கள், மோயீசன்
இடம் :- சீனாய் மலையடிவாரம்

### இஸ்ராயேல் மக்கள் I வசனம்

எகிப்து நாட்டிலிருந்து எங்களை நடத்தி வந்த அந்த ஆள் மோயீசனுக்கு என்ன ஆயிற்றோ

### இஸ்ராயேல் மக்கள் II வசனம்

மலை மீது ஏறிப்போன அந்த மனுஷன் உயிரோடு இருப்பாரோ இல்லை செத்திருப்பாரோ

### இஸ்ராயேல் மக்கள் III வசனம்

திரும்பி வருவாரோ மாட்டாரோ

### இஸ்ராயேல் மக்கள் IV வசனம்

சட்டங்கள் வாங்கப் போனவர் சங்கடத்தில் மாட்டிக்கொண்டாரோ

### இஸ்ராயேல் மக்கள் I வசனம்

எங்களுக்குச் சட்டங்கள் தான் இல்லை வாழும் நெறிமுறைதான் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இஸ்ராயேல் மக்கள் II வசனம்
போகட்டும் நாம் வணங்குவதற்கு ஒரு கடவுள் வேண்டாமோ

### இஸ்ராயேல் மக்கள் III வசனம்
நாம் தொழுவதற்கு ஒரு தெய்வம் வேண்டாமோ

### இஸ்ராயேல் மக்கள் IV வசனம்
எங்கள் வழிபாட்டிற்கு ஒரு இறைவன் வேண்டாமோ

### இஸ்ராயேல் மக்கள் I வசனம்
ஆரோன் நாங்கள் வழிபாடு செய்வதற்கு ஒரு தெய்வத்தை உருவாக்கித் தாரும்.

### ஆரோன் விருத்தம்
துயரங்கள் தீர்த்த நல்ல தூயவரை மறந்தே மதி
மயங்கியே தியங்கி நிற்கும் கயவரே மாயம் என்னோ
ஆயரை இழந்த ஆட்டுக் கூட்டந்தான் சிதறிப்போகும்
செய்நன்றி கொன்றீர் உங்கள் விருப்பம் போல் செய்குவீரே

### ஆரோன் வசனம்
நன்றி கொன்ற பாவிகளே நீங்கள் செய்வது எது என்று தெரியாது செய்கிறீர்கள். நான் சொன்னாலும் நீங்கள் கேட்கப்போவதில்லை இந்தப் பழி பாவங்களெல்லாம் உங்கள் மேலும் உங்கள் பிள்ளைகள் மேலும் அவர்கள் சந்ததி மேலும் சூழப்போகின்றது.

### ஆரோன் வசனம்
உங்கள் மனைவியர் புதல்வர் புதல்வியர்களின் பொற்காதணிகளைக் கழற்றித் தாருங்கள். அவைகளைக் கொண்டு ஓர் பொற்கன்றுக் குட்டியை உருவாக்குவோம்.

### (இஸ்ராயேல் மக்கள் தங்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டெடுத்து ஆண்டவரை மறந்து தாங்கள் வழிபடுவதற்காக பொன்கன்றுக்குட்டியை உருவாக்கி வழிபடுதல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு :- போர்த்துக்கல் எனும் தேசமது ....... மாவீரன் சங்கிலியன்

## இஸ்ராயேல் மக்கள் I தரு

பொன் கன்றுக்குட்டி எங்கள் போற்றும் உயர் தெய்வம் என்றே
எண்ணி நாங்கள் மண்ணில் புகழ் சாற்றுவோம் - இந்த
மண் வியக்கும் வண்ணம் மது ஊற்றுவோம் - அந்த
விண்ணை முட்டும் நெடிய கொடி ஏற்றுவோம்

## இஸ்ராயேல் மக்கள் II தரு

மின்னலிலே நிறமெடுத்து பொன்னில் புது வடிவெடுத்த
கன்னல் நிகர் எங்கள் கன்றுக்குட்டியே - நாங்கள்
இன்பமுடன் உன்னைச் சுற்றிச் சூழுவோம் - எங்கள்
இனமெல்லாம் உன் தாளில் வீழுவோம்

## இஸ்ராயேல் மக்கள் III தரு

ஆட்டம் போட்டுப் பாட்டம் போட்டு அதிலே உந்தன் நாட்டம் கண்டு
கூட்டம் போட்டுக் கூவுகின்றோம் மதுவுண்டு - எங்கள்
வாட்டம் விட்டோம் வானுயரக் குதிப்போமே - நாங்கள்
நீட்டம் உந்தன் நாமம் செப்பித் துதிப்போமே

## இஸ்ராயேல் மக்கள் IV தரு

சோபனங்கள் பாடி அகில் தூப தீப பூசை செய்து
அபிஷேக ஆராதனை பண்ணுவோம் - எமக்கு
சுபீட்சங்கள் தேடி வரும் தன்னாலே - நாங்கள்
செபித்திடுவோம் பொன்னின் கன்று முன்னாலே

## இஸ்ராயேல் மக்கள் V தரு

எட்டுத் திக்கும் கொட்டு முரசெட்டும் ஒலி பட்டு விழ
இட்டமாய் நாம் உன்னையேதான் நேசிப்போம் - நாங்கள்
சிட்டுகள் போல் வானுயர ஆசிப்போம் - கைகள்
தட்டி நாளும் ஒட்டி நின்றே பூஜிப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ராயேல் மக்கள் VI தரு

வீடு நாடு காடு என்று ஓடி ஓடித் தேடி உந்தன்
ஈடு இல்லாத் தாளடியில் கூடுவோம் - நாங்கள்
ஏடெடுத்து உன் புகழைப் பாடுவோம் - நாளும்
சோடு சோடாய் சேர்ந்து ஆட்டம் போடுவோம்

## இஸ்ராயேல் மக்கள் VII தரு

அண்ண வண்ண ஜாலங்காட்ட வடிவெடுத்த பொன்னின் கன்றே
வாஞ்சையோடு உன் பெயரைச் சூட்டுவோம் - நாங்கள்
பண்ணெடுத்து உன் புகழை மீட்டுவோம் - இந்தப்
பாரெல்லாம் உன் நினைவை நாட்டுவேன்

## இஸ்ராயேல் மக்கள் VIII தரு

காலை மாலை பூசை செய்து கடவுள் உந்தன் நாமம் ஓதி
அலை அலையாய் ஆடி வந்து சேருவோம் - உந்தன்
சிலை தனற்கே பலி செலுத்தி தீருவோம் - எங்கள்
கலை இதுவோ பாடி களி கூருவோம்.

## இஸ்ராயேல் மக்கள் I வசனம்

இஸ்ரவேலே உன்னை எகிப்து நாட்டிலிருந்து நடத்தி வந்த தெய்வம் இதுவே

## இஸ்ராயேல் மக்கள் II வசனம்

இத்தெய்வத்துக்கு நாங்கள் எரிபலிகள் செலுத்துவோம்

## இஸ்ராயேல் மக்கள் III வசனம்

இதற்கே நாம் வழிபாடு செய்வோம்

## இஸ்ராயேல் மக்கள் IV வசனம்

பொன் கன்றுக்குட்டியே எங்கள் கடவுள்

## இஸ்ராயேல் மக்கள் I வசனம்

அதனைப் புகழ்ந்தேற்றுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ராயேல் மக்கள் II வசனம்

தூப தீபங் காட்டுவோம்

## இஸ்ராயேல் மக்கள் III வசனம்

பாடுவோம் ஆடுவோம்

## இஸ்ராயேல் மக்கள் IV வசனம்

பண்ணெடுத்து வண்ணத் துதி சூடுவோம்

## இஸ்ராயேல் மக்கள் V வசனம்

பாமாலை புனைந்தோதிப் போற்றுவோம்

## இஸ்ராயேல் மக்கள் VI வசனம்

பதிகம் பாடிப் புகழ் சாற்றுவோம்

**(கடவுளிடம் கட்டளைகளை வேண்டிப் பெற்றுக் கொண்டு சீனாய் மலையிலிருந்து இறங்கி வந்த மோயீசன் இக் காட்சியைக் கண்டு கடுங்கோபம் கொள்கின்றார்)**

## மோயீசன் சந்தத்தாழிசை

அடிமைத் தளையை அறுத்து மீட்ட ஆண்டவரை மறந்து நீர்
இடையில் உடையும் பொன்னின் கன்றின் அடியில் வீழ்ந்து
அழிகின்றீர்
விடியும் கதிரைப் படைத்த தேவன் விஞ்சும் சர்வ வல்லமை
நொடியில் பொன்னின் கன்று பொடிப் பொடியதாக் ஒழியவே

## மோயீசன் வசனம்

கேடு கெட்டவர்களே உங்களைத் தனது மக்களினமாக குருத்துவ அரசாக உயர்த்திய கடவுளுக்கு எகிப்தியரின் அடிமைத் தனத்திலிருந்து மீட்ட ஆண்டவருக்கு செங்கடல் பிரிந்து தரைவழி காட்டிய தேவனுக்கு பாலையிலே உணவளித்து பாறையிலே நீர் சுரக்க வைத்த இறைவனுக்குத் துரோகம் செய்துவிட்டீர்களே ஆண்டவரின் கோபத்துக்கு ஆளாகிவிட்டீர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இஸ்ராயேல் மக்கள் I வசனம்**
நாம் தவறு செய்து விட்டோம்

**இஸ்ராயேல் மக்கள் II வசனம்**
எம்மை வழி நடத்திய ஆண்டவரை மறந்துவிட்டோம்

**இஸ்ராயேல் மக்கள் III வசனம்**
எமக்கு விடிவினைத் தந்த கடவுளுக்குத் துரோகம் செய்து விட்டோம்

**இஸ்ராயேல் மக்கள் IV வசனம்**
தேவனின் கோபத்துக்கு ஆளாகி விட்டோம்

**இஸ்ராயேல் மக்கள் I வசனம்**
தலைமுறை தலைமுறைக்கும் தீராத பழியைத் தேடி விட்டோம்

**இஸ்ராயேல் மக்கள் II வசனம்**
ஆண்டவர் எம்மை மன்னிப்பாரா

**இஸ்ராயேல் மக்கள் III வசனம்**
கடவுள் எமது பாவங்களைப் பொறுத்தருள்வாராக

**இஸ்ராயேல் மக்கள் IV வசனம்**
வழிதவறிய எங்களுக்கு நல் வழிகாட்ட வேண்டும்

**இஸ்ராயேல் மக்கள் I வசனம்**
பாதைமாறிய எமக்குத் தகுந்த பாதையைச் செப்பனிட்டுத்தர வேண்டும்

**இஸ்ராயேல் மக்கள் II வசனம்**
நெறி பிறழ்ந்த ஈனர்களை இரட்சிக்க வேண்டும்

**இஸ்ராயேல் மக்கள் III வசனம்**
நன்றி கொன்ற பாவிகளை பரிசுத்தப்படுத்த வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ராயேல் மக்கள் IV வசனம்

தீயோராகி விட்ட எங்களைத் தூயோராக்க வேண்டும்

## இஸ்ராயேல் மக்கள் V வசனம்

சண்டாளராகி விட்ட எமக்குச் சாந்தி கிடைக்குமா

## இஸ்ராயேல் மக்கள் VI வசனம்

சர்வேஸ்பரனின் சாபத்திற்கு ஆளாகு விட்ட பாவிகளுக்கு சமாதானம் கிட்டுமா

## மோயீசன் வசனம்

அறியாது தவறு செய்பவன் மன்னிக்கப்படுகின்றான். தவறு என்று தெரிந்தும் செய்பவன் சண்டாளனாகின்றான். செய்த தவறை உணர்ந்து அதற்காகப் பச்சாத்தாபப் படுகின்றவன். புனிதனாகின்றான். கடவுள் தந்த பத்துக் கட்டளைகளின் படி நடந்து இரட்சிப்படைவீர்களாக.

மெட்டு :- யேசு மறைகாக்க ............ குருதியில் மலர்ந்த அன்பு மலர்

## மோயீசன் தரு

ஒருவரே கடவுளே ஒருவரே ஆண்டவன்
வேறொரு தேவன் இல்லை அறிவாய்
உருவங்கள் சிலைகளை உருவாக்கி வழிபட்டால்
சருவேஸ்பரன் கோபத்திற்காளாவீர்

பரிசுத்தமாய் சருவேஸ்பரன் திருநாமம்
கருத்துடன் அனுசரித்தல் கடனே
சருவேஸ்பரன் திருப்பெயரினை வியர்த்தமாய்
பிரயோகம் செய்யாதிருப்பீராக

தாய்தந்தை உலகத்தில் கண்கண்ட தெய்வங்கள்
சேய் நீங்கள் அவரை என்றும் மதித்தே
தூயோராய் அவர் சேவை புரிந்திடில் அருள் தேவன்
நேயம் உமக்குண்டாகும் நிசமே

மெட்டு :- மானிர் பவம் போக்க ........ தியாகராஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மறுதரு

களவு செய்யாதீர் பொருள் கவர்ந்திடில் படரும் மருள்
உளமதில் தூய்மை வேண்டும் வாய்மையே வெல்லும்
கொலையது செய்ய வேண்டாம் கொடுமை அதை விடுவிப்பீர்
தொலையாதே அந்தப் பாவம் பழி விடுப்பீர்

பொய் என்றும் பேசாதீர்கள் பிறர்க்கெதிராக என்றும்
பொய்ச்சான்று பகர்ந்திடாதீர் பெருகும் பாவம்
விபசாரம் செய்யாதீர்கள் பிறர்தாரம் கவராதீர்கள்
அபசாரம் நேருமன்றோ நினைவில் கொள்வீர்

மெட்டு :- கோடி சூரிய பின்பமே .............. மாவீரன் சங்கிலியன்

### மோயீசன் ஆரோன் இஸ்ராயேல் மக்கள் பாடல்

அருளே அமுதே அலை சூழ் உலகின் திருவே - அடிமை
இருள் கிளித்தெழுந்திடு உதயமே நிகரில்லா
சருவேஸ்பரனே சாற்றுவோம் நின் புகழே

அலைகள் பொங்கும் கடலே பிரியத்தரையாய் - ஆங்கு
சலமது சுவெரென நிலைபெறப் பாதையும்
இலங்க இஸ்ரேல் கலக்கம் தீர்த்தீர் தேவா

அடிமை நாட்டின் கொடுமை மீட்ட தேவா - உந்தன்
குடிமக்கள் எமக்கென்றோர் கெடி கொற்றம் தருகுவீர்
அடிபனிந்தோம் முடிவில்லாதா போற்றி


வானம் பூமி மண்டலங்கள் யாவும் - உந்தன்
ஞானமே பொழி அருள் கானங்கள் பாடிடும்
மோன முத்தி முதல்வாநின்தாள் போற்றி

நன்றி
கூத்து ஆக்கம்
கலாபூசணம் அண்ணவியர்
மு.அருள்பிரகாசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org